AR
60

செய்யூர்



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை – 600 008
2016, திருவள்ளுவர் ஆண்டு – 2047

செய்யூர்

பதிப்பாசிரியர்

முனைவர் **தா. கார்த்திகேயன்,** இஆப.,
ஆணையர்

ஆசிரியர்

க. சக்திவேல்

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008
2016, திருவள்ளுவர் ஆண்டு - 2047

அச்சிட்டோர் விவரம்

நூலின் பெயர்	:	செய்யூர்
பதிப்பாசிரியர்	:	முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., ஆணையர்
ஆசிரியர்	:	க. சக்திவேல்
வெளியீட்டு உரிமை	:	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
பாடம்	:	வரலாறு
மொழி	:	தமிழ்
வெளியீட்டு எண்	:	285
பதிப்பு	:	முதல் பதிப்பு
ஆண்டு	:	2016
பிரதிகள்	:	1000
பக்கங்கள்	:	104
எழுத்தளவு	:	12 புள்ளிகள்
தாள் அளவு	:	80 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ
விலை	:	ரூ.44.00
அச்சிட்டோர்	:	தரமணி மகளிர் கூட்டுறவு அச்சகம், 46, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை-600 014.
வெளியீட்டாளர்	:	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தமிழ் வளர்ச்சி வளாகம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை - 600 008.

முன்அட்டை படம் : செய்யூர் வன்மீகநாதர் கோயில் முன்புறத்தோற்றம்
பின்அட்டை படம் : செய்யூர் கந்தசாமி கோயில் உட்புறத்தோற்றம்

பொருளடக்கம்

		பக்க எண்
	பதிப்புரை	
	முன்னுரை	
1.	செய்யூர்	1
2.	தொல்லியல் நோக்கில் செய்யூர்	6
3.	வரலாற்று நோக்கில் செய்யூர்	11
4.	கோயில் வரலாறு	13
5.	சிற்பங்கள்	23
6.	செய்யூர் - கோயில்கள்	36
7.	கல்வெட்டு செய்திகள்	39
8.	முடிவுரை	48
9.	துணைநூல் பட்டியல்	50
10.	பின்னிணைப்பு	52

முனைவர் **தா. கார்த்திகேயன்,** இ.ஆ.ப.,
ஆணையர்

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்
தமிழ்ச் சாலை
சென்னை - 600 008

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தமிழகத்திலுள்ள கல்வெட்டுகள், தொல்லியல், அகழாய்வு, தமிழகக் கோயில்களின் கட்டடம், கலை, சிற்பம், ஓவியம், செப்புத் திருமேனிகள் ஆகியவற்றைப் பற்றி விரிவாக மாணவர்கள் கற்கவேண்டி 1973-74-ஆம் ஆண்டு 'கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம்' ஒன்றினை நிறுவியது. இக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஆண்டுதோறும் முதுகலைப் பட்டயம் பெற்ற எட்டு மாணவர்களுக்கு 'கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்' என்னும் முதுநிலைப் பட்டயம் ஒன்றினை வழங்குகிறது. இதுவரை இப்பயிற்சி நிறுவனத்தில் 219 மாணவர்கள் பயின்றுள்ளனர்.

இம்மாணவர்களது பயிற்சிக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட கோயிலைத் தேர்வு செய்து அவ்வூர் மற்றும் அவ்வூர் கோயில்களைப் பற்றி விரிவாக ஆய்வு செய்து ஆய்வேடு ஒன்றினைச் சமர்ப்பிக்கின்றனர். இவ்வாய்வேடுகளில் இதுவரை 39 ஆய்வேடுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் 2002-2003-ஆம் ஆண்டு பயின்ற க. சக்திவேல் அவர்கள் எழுதிய "செய்யூர் வன்மீகநாதர் மற்றும் கைலாசநாதர் கோயில் ஓர் ஆய்வு" என்னும் ஆய்வேடு தற்போது செய்யூர் எனும் பெயரில் 40-ஆவது நூலாக வெளிவருகிறது. இந்நூல் செய்யூரில்அமைந்துள்ள வன்மீகநாதர் மற்றும் கைலாசநாதர் கோயில் கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவைப் பற்றியும் அக்கோயில் கல்வெட்டுகள் மூலம் அக்கால அரசியல், சமுதாய பொருளாதாரச் செய்திகளையும் விரிவாக விளக்குகிறது.

செய்யூர் வரலாற்று நூல் பதிப்பிக்கும் பணியினை மேற்கொண்ட தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் முனைவர் சீ. வசந்தி அவர்களுக்கும் மற்றும் இந்நூலினை நல்லமுறையில் அச்சுப்பிழைத்திருத்திய திருமதி. ச. சரஸ்வதி ஆகியோருக்கும் என் மனமார்ந்த பாராட்டுகள்.

இந்த வரலாற்று நூலினை வெளிக்கொணர 2015-2016-ஆம் ஆண்டு தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் (TANNI) கீழ் நிதியுதவி நல்கி சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வரலாற்று மாணவர்களுக்கும், தொல்லியல் மாணவர்களுக்கும், தொல்லியல் ஆர்வலர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆணையர்

முன்னுரை

இயற்கையின் எண்ணிறந்த வெளித்தோற்றங்களான சூரியன், சந்திரன், இடி, மின்னல், மழை, கடல், ஆறு, மலை, மரம், நெருப்பு போன்றவற்றின் மீது அச்ச உணர்வு கொண்டும், நன்மை விளைவிப்பதனால் நன்றி உணர்வு கொண்டும், அவற்றை கடவுளாக எண்ணி பன்னெடுங்காலமாக வழிபட்டு வருகின்றனர். அவ்வழிபாடானது உருவ வழிபாடு கொண்டு, இன்று வியத்தகு கோயிலாக உருவெடுத்துள்ளது. இந்தியா முழுவதும் அமைந்துள்ள திருக்கோயில்களில் சிற்பக்கலை, கட்டடம், படிமம், சித்திரம், கல்வெட்டு போன்றவை வரலாற்று உண்மையாகும். அவ்வகையில் செய்யூர் எனும் ஊரில் உள்ள கோயில்கள் அவ்வூரின் அக்காலத்தின் வரலாற்றுத் தகவல்களையும், மக்களின் உணர்வுகளையும் வெளிக்கொணர்கிறது.

ஆசிரியர்

1. செய்யூர் பற்றிய செய்திகள்

செய்யூர் அமைவிடம்

தொண்டைநாடு சான்றோர் உடைத்து என்னும் முதுமொழி கொண்ட தொண்டைமண்டலத்தின் தலைநகரான காஞ்சிபுரம் மாவட்டத்தில் செய்யூர் அமைந்துள்ளது. மதுராந்தகத்திலிருந்து கிழக்கே 20 கி.மீ. தொலைவிலும், சென்னையையடுத்த கிழக்குக் கடற்கரைச் சாலையிலிந்து 80 கி.மீ. தொலைவிலும் இவ்வூர் உள்ளது.

செய்யூர் வட்டம்

செய்யூர் வட்டமானது காஞ்சிபுரம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் 645.90 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டுள்ளது. 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 121 கிராமங்களைக்கொண்ட இவ்வூரின் மக்கள் தொகை 1,84,161 ஆகும். 30.15 சதவீத மக்கள் கல்வியறிவு பெற்றுள்ளனர். 42 சதவீதத்தினர் விவசாயிகளாகவும், 25 சதவீத மக்கள் விவசாயக் கூலியாகவும் உள்ளனர். இவ்வூரில் அந்தணர், தொண்டை மண்டல வேளாளர், தேசிகர், வீரசைவப் பண்டாரம், ஆயிரவைசிய செட்டியார், வாணிப செட்டியார், சேனைத் தலைவர், செங்குந்தர், கருணீகர், வன்னியர், ஆச்சாரி, யாதவர், குயவர், சலவைத் தொழிலாளர், ஆதி திராவிடர் எனப் பல்வேறு சமமூகத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

1944-இல் திரு முத்தைய முதலியார் இயற்றிய **"சேயூர்த்தல வரலாறு"** என்ற நூலில் அன்றைய ஊரின் நிலையை மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். அதில் மக்கள் தொகை 6200 எனவும் அதில் சுமார் 3000 பேர் ஆதிதிராவிடர் எனவும், கிராம பஞ்சாயத்து, கூட்டுறவுச் சங்கங்கள், உப்பு அலுவலகம், துணைப் பதிவாளர் அலுவலகம், காவல் நிலையம், அஞ்சல் நிலையம் மற்றும் இங்கே கூடும் வியாழக்கிழமை சந்தை அதன் வருமானம் போன்றவற்றையும் குறிப்பிட்டுள்ளார். இன்று இவ்வூரின் மக்கள் தொகை 15,678 பேர் ஆகும். மேலும் செய்யூரில் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், காவல் நிலையம், வருவாய்த்துறை அலுவலகம் மற்றும் 6 கல்வி நிலையங்கள் உள்ளன.

ஊர்ப் பெயர்க் காரணம்

சேயூர் என்பதே தற்போது செய்யூர் என்று மருவியுள்ளது. சேயூர் அதாவது முருகனுடைய ஊர். சேய் எனும் பெயர், முருகனுக்குரிய பெயர்களில் ஒன்று. திருமாலை மாயோன் என்றும், முருகனை சேயோன் என்றும் இலக்கியங்கள் சுட்டுகின்றன.

"சேயோன் மேய மைவரை உலகமும்"

- தொல்காப்பியம்

"காஅய் கடவுள் சேஎய் செவ்வேள்"

- பரிபாடல்

"மாமுதல் தடிதந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செல்வேற் சேய்"

- திருமுருகாற்றுப்படை

மேற்காணும் இலக்கியவரிகள் முருகனை 'சேய்' 'சேயோன்' என்று விளிப்பதை நன்குணர முடிகிறது. மேலும் சேயூர் முருகன் பிள்ளைத்தமிழில் இவ்வூர் செய்கை, செயூர், சேயூர், செய்கையம்பதி, வளவநகர், அயில்வனம் எனவும் குறிப்பிடப்படுகிறது. ஆகவே இவ்வூர் முருகனின் பெயரால் சேயூர் என்ற பெயர் எய்திற்று என்பர்.

இலக்கியங்களில் செய்யூர்

1.திருப்புகழ்

கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் இத்தலத்தைப் பற்றிப் போற்றி புகழ்ந்து பாடியுள்ளார். இருப்பினும் இவ்வூர் பற்றிய பாடல்கள் முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை.

அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய சேயூர் முருகன் திருப்புகழ்

"முகிலாமெனும் வார்குழ லார்சிலை
புருவார்கயல் வேல்விழி யார்ச்சி
முகவார்தர ளாமென வேநகை" - புரிமாதர்

2. சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்

செய்யூர் முருகன் மீது வீரராகவ முதலியார் பிள்ளைத்தமிழ் இயற்றியுள்ளார். இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் பொன்விளைந்த களத்தூர் என்னும் ஊருக்கு அருகில் உள்ள பூதூரில் பிறந்தவர்

ஆவார். இவர் பிறவியிலேயே கண்பார்வை அற்றவர். இவர் திருக்கருக்குறைப் புராணம், திருவாரூர் உலா, சேயூர் கலம்பகம் முதலான நூல்களை இயற்றியுள்ளார். சேயூர் முருகன் பிள்ளைத்தமிழை திருவாவடுதுறை ஆதினம் 1958-இல் வெளியிட்டுள்ளது.

3. சேயூர் கலம்பகம்

'சேயூர் கலம்பகம்' என்னும் நூலினை வீரராகவ முதலியார் இயற்றியுள்ளார். ஆனால் இந்நூல் அச்சாகி நூல் வடிவம் பெறவில்லை.

4. சேயூர் முருகன் உலா

இவ்வுலாவை கவிராஜ பிள்ளை என்பவர் பாடியுள்ளார். இவர் 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவி ஆவார். இவர் சிறந்த கவியாக இருந்திருத்தல் வேண்டும். ஏனெனில் இவரது பெயரின் முன்னொட்டில் 'கவிராஜ' என்ற பட்டத்தினைப் பெற்றுள்ளார். இவர் இயற்றிய சேயூர் முருகன் உலாவினை வீரராகவ முதலியார் அவர்கள் மிகுந்து பாராட்டிப் பாடியுள்ளார்.

5. சேயூர் முருகன் பதிகக் கோவை

இப்பதிகத்தை ஸ்ரீ முருகதாச சுவாமிகள் பாடியுள்ளார். இவரை தண்டபாணி சுவாமி என்றும், திருப்புகழ் சுவாமி என்றும் அழைப்பர். இவர் தில்லை திருவாயிரம், அருணகிரிநாதர் புராணம், புலவர் புராணம் போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

கி.பி. 1839-இல் தோன்றிய இவர் செவ்வேள் பதிகம், கந்தப் பதிகம், திருப்புகழ்ப் பதிகம் என மூன்று பதிகங்களை நூலாக எழுதியுள்ளார்.

6. நெஞ்சுவிடு தூது

நெஞ்சுவிடு தூது என்னும் இந்நூலினை 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியுள்ளார். இவர் சேயூரைப் பற்றி

"வேதண்டம், ஒப்ப உயர்த்துயுய ருப்புக் குலான் மீது வெப்ப....

திக்கெலா மெத்தமலி சேயூரும்....."

எனப் பாடியுள்ளார். இப்பாடலில் இவ்வூரின் உப்பு வளத்தைப் பற்றியும், கொடைச்சிறப்புப் பற்றியும் பாடியுள்ளார்.

உ. தொல்லியல் நோக்கில் செய்யூர்

செய்யூரில் தென் மற்றும் தென்மேற்குப் பகுதிகளில் ஒருசில மலைக் குன்றுகள் காணப்படுகின்றன. அம்மலைக் குன்றுகளில் நுண்கற்காலக் கருவிகள் எளிதில் கிடைக்கின்றன. மேலும் ஊரின் மேற்கே கள்ளன் குட்டை எனும் இடத்தில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் அதிகஅளவில் தென்படுகின்றன. ஈமச்சின்னங்களின் வட்டக்கல் பெரும்பாலும் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர இப்பகுதியில் ஒரு சில நெடுகல், கற்பேழை போன்ற ஈமச்சின்னங்களைக் காணமுடிகிறது. மேலும் மணல் எடுத்த பகுதியில் மற்றும் இரும்பு உருக்கிய இரும்பு உலையின் வாய்ப்பகுதி, இரும்பின் கசடு கிடைத்துள்ளது.

மட்கலன்கள்

பண்டைக்கால மக்கள் அன்றாட வாழ்க்கையில் உணவுப் பொருட்களைச் சமைப்பதற்கும், உண்ணுவதற்கும் சேமித்து வைப்பதற்கும், மட்கலன்களையே மிகுதியாகப் பயன்படுத்தி யுள்ளமையை அவை கள ஆய்விலும், அகழ்வாய்வுகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு பண்பாட்டிலும் அவரவர் பயன்படுத்திய மட்கலன்கள் அக்காலப் பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடி எனக் கூறலாம். இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு பாகங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் வெவ்வேறு வகையான மட்கலன்கள் கிடைத்துள்ளன. தொல்லியல் வல்லுநர்கள்

அம்மட்கலன்களை முறைப்படுத்தியும், அவற்றின் காலத்தினையும் பற்றி விரிவாக ஆய்வுத் தொகுப்புகளில் எழுதியுள்ளனர். இங்கு கிடைக்கப் பெற்றுள்ள சில மட்கலன்கள் பெருங்கற்கால ஈமச்சின்னங்களின் பகுதியில் கிடைக்கப் பெற்றவையாகும். மேலும் அப்பகுதியின் அருகில் நுண்கற்காலத் தடயங்களும் கிடைத்துள்ளன.

மேலும் கள்ளன்குட்டைக்கு சற்று தொலைவில் ஓணம்பாக்கம் என்ற ஊரிலுள்ள கருப்பங்குன்றில் சமணத்துறவிகளின் படுக்கையும் சமணத் தீர்த்தங்கரர்களின் உருவமும் காணப்படுகின்றன. அவற்றில் பார்சுவநாதர் சிற்பம் மிக முக்கியமானதாகும். அச்சிற்பம் உள்ள கோட்டத்தின்மீது கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கிரந்தம் கலந்த தமிழில் கல்வெட்டு ஒன்று உள்ளது. அம்மலையில் ஆதிநாதர், மகாவீரர் உருவமும் செதுக்கப்பட்டுள்ளன. இம்மலையின் மேற்பகுதியில் ஒரு பாறையில் ஒரு சுதைக்கட்டடம் இருந்ததற்கான அடையாளம் காணப்படுகிறது. அக்கல்வெட்டில் வாசுதேவ சித்தாந்த படாரர் என்பவர் இக்கோயிலினை உருவாக்கியுள்ளதைத் தெரிவிக்கிறது.

சாம்பல் நிற மட்பாண்டங்கள் (Grey ware)

புதிய கற்காலத்தில்தான் மனிதன் முதன்முதலாக மட்கலன்களை வனைவதற்கு கற்றுக்கொண்டான். அக்காலத்தில் செய்யப்பட்ட மட்பாண்டங்கள் கையால் வனையப்பட்டவை. அவை சாம்பல் நிறமாகவும் இருந்தன. மிகவும் அரிதாகவே சக்கரத்தால் வனையப்பட்டவைக் கிடைக்கின்றன. புதிய கற்காலத்திற்குப் பின்னரும் சாம்பல் நிற மட்கலன்கள் பல்வேறு பண்பாட்டிற்குரிய

மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. வரலாற்றுக் காலத்தில் குறிப்பாக கிறித்துவ சகாப்தத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் கூட சாம்பல்நிற மட்கலன்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் வண்ணங்கள் தீட்டப் பெறாவிடிலும், நேர்த்தியான முறையில் மெருகூட்டப் பெற்றுத் திகழ்வதைக் காணமுடிகிறது.

கறுப்பு சிவப்புநிற மட்கலன்கள் (Black and Red ware)

இம்மட்கலன்களின் உட்புறம் கறுப்பாகவும், வெளிப்புறம் சிவப்பாகவும் இருக்கும். அதன் உட்புறத்தில் கரிப்பொருள் கலந்த கலவையைப்பூசி அல்லது உமி போன்ற பொருள்களை வைத்து அப்பாண்டத்தைத் தலைகீழாகக் கவிழ்த்துச் சூளையில் வைத்து சுடுவதால் மட்கலன்களின் உட்பகுதியிலும் விளிம்புப் பகுதியிலும் அதிகம் காற்றுப்படுவதில்லை. ஆதலால் கறுப்பாகவும், அவற்றின் வெளிப்புறத்தில் காற்று நன்கு படுவதால் சிவப்பாகவும் இருக்கும்.

முதன்முதலில் இரும்பு கால மக்களது சவக்குழிகளில் அதிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டமையால், இவற்றை பெருங்கற்கால மட்கலன்கள் (Megalithic Pottery) என்று அழைத்தனர். பின்னர் சவக்குழியில் மட்டுமல்லாமல் மக்கள் நிலையாக வாழ்ந்த இடங்களிலும் ஏராளமாகக் கிடைத்துள்ளன. ஆனால் இருவேறு இடங்களில் கிடைத்த பானை ஓடுகளில் வடிவ அமைப்புகள் (Shape) மாறுபடுகின்றன.

காவிக் கலவை பூசப்பட்ட மட்கலன்கள் (Russet Coated Pottery)

பண்டைக்கால மக்கள் பயன்படுத்திய மட்கல வகைகளுள் இதுவும் ஒன்றாகும். இந்த மட்கலன்களில் பெரும்பாலும் காவிக் கலவை வெளிப்புறத்தில் மட்டும் பூசப்பட்டு இருக்கும். இவற்றிற்கு மாறாக உட்புறம் காவிக்கலவை பூசப்பெற்றவையும் அண்மைக்கால அகழ்வாய்வுகளில் கிடைத்திருக்கின்றன. பொதுவாக இந்த வகையினைச் சார்ந்த மட்கலன்கள் வண்ணம் தீட்டப்பட்டும், தீட்டப்பெறாமலும் காணப்படுவதுண்டு, அதாவது சிவப்பு நிற மட்கலன்களின் மீது காவிக் கலவை மட்டும் பூசப்படலாம். அல்லது அக்காவிக் கலவையின்மீது வெண்மையான அல்லது மஞ்சள் நிறமான வண்ணங்கள் தீட்டப்பெற்றும் காணப்படலாம்.

சிவப்பு மட்கலன்கள்

சிவப்பு நிற மட்கலன்கள் புதிய கற்காலத்திலேயே இருந்தனவென்றும், அவை பெரும்பாலும் கையினால் வனையப்பட்டவையென்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவை நேர்த்தியாக இல்லாமலும் நன்கு சுடப்படாமலும் திகழ்ந்தன. உலோகக் காலத்திலும், வரலாற்றுக் காலத்திலும் அதற்குப் பின்னரும் சக்கரத்தின் உதவியால் சிவப்பு மட்கலன்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மனிதனின் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு உபயோகங்களுக்காக இவை பயன்படுத்தப்பட்டமையால், மிகுதியான அளவில் பல்வேறு வடிவ அமைப்புகளுடன் செய்யப்பட்டுள்ளன. காலத்திற்கேற்பவும், பண்பாட்டிற்கேற்பவும் இவற்றின் வடிவ அமைப்புகள் மாறுபட்டுக் காணப்படுகின்றன. இவ்வகை மட்கலன்களுள் சற்று கரடு முரடாகவும் நேர்த்தி இல்லாததாகவும் உள்ளவற்றை நேர்த்தியற்ற சிவப்பு மட்கலன்கள் (Coarse Red ware) என்றழைப்பர். சிறிது நேர்த்தியாகவும் மேற்பரப்பில் சிவப்பு சாயம் பூசப்பட்டதாகவும் இருப்பவற்றை சிவப்பு சாயம் பூசிய மட்கலன்கள் (Red Sliped ware) எனக் கூறுவர்.

சிவப்பு மட்பாண்டங்களிலும் பெரும்பான்மையானவற்றில் வண்ணங்கள் தீட்டப் பெறவில்லை. மக்கள் அன்றாட வாழ்க்கையில் இதனை அதிகமாகப் பயன்படுத்தியது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். இவை சமையலுக்கும் தண்ணீர் சேமித்து வைப்பதற்கும், உணவு உண்பதற்கும் மிகுதியாக உபயோகப் படுத்தப்பட்டன. ஆகையால் வண்ணங்கள் தீட்டினால் அவை நீண்ட நாட்களுக்கு நிலைப்பதில்லை. எனவேதான் சிவப்பு மட்கலன்களில் வண்ணம் தீட்டப்பெறவில்லை.

இவ்வூரில் சோழர்காலக் கோயில்களான கைலாசநாதர் கோயிலும், வன்மீகநாதர் கோயிலும் உள்ளன. இக்கோயில் கல்வெட்டுகள் இவ்வூரை செய்யூர் என்று குறிப்பிட்டு வீரராஜேந்திரநல்லூர் என்றும், ஜெயங்கொண்டசோழ நல்லூர் என்றும் குறிப்பிடுகின்றன. முருகனுக்குரிய கோயில் சிறப்பாக இருப்பினும் இக்கோயிலில் கல்வெட்டுகள் காணப்படவில்லை. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டே உள்ளது. அதில் கோயில் புதிய கட்டுமானத்தை கட்டியதைக் குறிப்பிடுகிறது.

3. வரலாற்று நோக்கில் செய்யூர்

செய்யூர் பகுதியில் வரலாற்றுக் காலம் தொட்டே வரலாற்றுத் தடயங்கள் காணப்படுகின்றன. கைலாசநாதர் கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம் கிடந்த நிலையில் உள்ளது. மகாமண்டபத்தில் லிங்கமும் இடபக்கத்தில் தேவி சிலையும் உள்ளது. மகாமண்டபத்தின் தெற்குப் பகுதியில் நுழைவு வாயில் காணப்படுகிறது. அதன் கிழக்கு வெளிப்பகுதியில் நந்தி ஒன்றும் உள்ளது. மிகப்பெரிய அளவில் அழகுடன் இருப்பினும் சிதைவடைந்துள்ளது. வன்மீகநாதர் கோயில் மட்டுமே இன்று நல்ல நிலையில் செயல்படுகிறது. அதனைத் தொடர்ந்து ஒருசில கோயில்கள் கட்டப்பட்டாலும் கந்தசாமி கோயில் மற்றும் வன்மீகநாதர் கோயிலே சிறந்து விளங்குகிறது.

சோழர்கால கோயில்களும் சோழர் வழி குடும்பத்தினர் இருந்தனர் என்றும் தல வரலாறு குறிப்பிடுகிறது. மேலும் சோழவளவன் என்பவனுக்கு வீரசோழன், வீரமார்த்தாண்டன், விரலாதவன், வீரராஜேந்திரன், வீர செம்பியன் என மகன்கள் இருந்ததாகவும், முன் மூவர் வட தெருவிலும், பின்னிருவர் தென் தெருவிலும் வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

மேலும் இத்தல வரலாற்று நூலில் வளவன் என்ற சொல்லுக்கு சோழன் எனப் பொருள் கூறி முதல் குலோத்துங்கன் காலத்தில் அவன் மகன் ஆதொண்டை சக்கரவர்த்தி ஆண்டது வளவநகர் என்றும், இவ்வூரில் குடியேறிய வேளாளர்களை

தொண்டை மண்டல வேளாளர் என்றும், கொண்டை கட்டி வேளாளர் என்றும் அழைத்தனர். யாழ்ப்பாண சரிதத்தில் **"செய்யூர் வேளான் இருமரபும் துய்ய தனிநாயக முதலியை நெடுந்தீவுக்கு அதிபதியாக்கினான்"** எனக் காணமுடிகிறது. எனவே செய்யூர் தொண்டை மண்டல வேளாளர் மரபின் புகழ் ஈழம் வரை சென்றதை அறியமுடிகிறது.

ஆதொண்டைச் சக்கரவர்த்தி சோழ மண்டலத்தை விட்டு காஞ்சி மண்டலத்தை அடைந்து, குறும்பர்களுடன் போரிட்டான் என்று கூறுகிறது. போரில் உதவிய வேளாளர்களை தொண்டை மண்டலத்தில் குடியேற்றினான் என்று கூறுகிறது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் சோழ மன்னர்களுக்கு பிரதிநிதியாகவும் பல கோட்டங்களை ஆண்டு வந்தனர் என்றும் கூறுகிறது. ஆனால் சோழ அரசு கி.பி. 850-இல் விஜயாலய சோழனால் ஏற்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் வந்த தொண்டைமான் வம்சத்தைச் சார்ந்த சைவ பெரியார் ஒற்றிக் கொண்டான் மகன் கழுக்குன்றனால் ஆலயத்திருப்பணி செய்யப்பட்டு கி.பி. 1522 விஷு வருஷம் தை மாதம் திருவிழா நடைபெற்றதாக **"சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்"** சிறு தேர்ப் பருவத்தில் கூறப்பட்டுள்ளது.

❖❖❖

4. கோயில் வரலாறு

வன்மீகநாதர் கோயில்

வன்மீகிநாத் கோயிலில் உள்ள கல்வெட்டு **"புற்றிடங் கொண்டருளிய மகாதேவர்"** என்றும் சேயூர் தல வரலாறு நூலில் 'வன்மீகநாதர்' என்றும் கூறுகின்றன.

வன்மீகநாதர் கோயில் அமைப்பு

வன்மீகநாதர் கோயில் ஊருக்கு வடக்குப் புறம் உள்ளது. இக்கோயிலில் உள்ள அம்மன் பெயர் முத்தாம்பிகை என்று அழைக்கப்படுகிறார்.

வன்மீகநாதர் கோயில் வடக்கு தெற்காக 51 கஜமும் கிழக்கு மேற்கில் 65 கஜமும் கொண்டுள்ளது. கோயில் கிழக்கு நோக்கியதாக இருப்பினும் வாயிற்கோபுரம் தெற்கு நோக்கி உள்ளது. இக்கோபுரத்தின் முன்பு பந்தல் இடுவதற்கு நிரந்தர கல்தூண்கள் உள்ளன. கல்வெட்டுகளில் இதனை 'திருக்காவணம்' என்றழைப்பர். கோபுரத்தின் சுவர் பகுதியில் உள்புறமும், வெளிப்புறமும் மண்டபம் உள்ளது. அங்குள்ள தூணில் புத்தர் சிலை இருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. இக்கோபுரமானது மூன்று தளங்களைக் கொண்டு சால அமைப்பைச் சார்ந்த சிகரஅமைப்புடன் ஐந்து கலசங்களைக் கொண்டு விளங்குகிறது. நான்கு பகுதியிலும் நான்கு நந்திகள் காணப்படுகின்றன.

கருவறை

கருவறை சதுர அமைப்புடன் காணப்படுகிறது. இதன் நீள அகலம் 13½ அடி ஆகும் உபபீடம் இல்லாமல் பீடம் மட்டுமே உள்ளது. பீடத்தின் பாதியளவு பூமிக்குள் மறைந்துள்ளது. அர்த்த மண்டபம் மற்றும் மகா மண்டபத்துடன் கூடிய உள் பிரகாரமும் அமைந்துள்ளது. அர்த்த மண்டபத்தின் தேவகோட்டத்தின் தென்புறத்தில் விநாயகர் வடபுறத்தில் துர்க்கையும் வீற்றிருக்கின்றனர். கருவறையின் தேவக்கோட்டத்தின் தென்புறம் தட்சிணா மூர்த்தியும், மேற்குபுறம் லிங்கோத்பவரும், வடபுறம் பிரம்மாவும் உள்ளனர். கருவறை ஒரு தளத்தினைக் கொண்டது. இதன் சிகரம் வட்ட வடிவமாக கட்டப்பட்டுள்ளது. சிகரத்தின் மீது கலசம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. கருவறை விமானம் கீழிருந்து உபானம், ஜகதி, முப்பட்டைக் குமுதம், கம்பு, பட்டி ஆகியவையும், சுவர்ப்பகுதியிலுள்ள தூண் பாதம், இடைக்கட்டு கலசம், விருத்தம், பத்மம், கண்டம், குடம், கண்டம் பலகை, வீர கண்டம், வெட்டுப்போதிகை ஆகிய அமைப்புடன் திகழ்கிறது.

தளப் பகுதியில் கொங்கையும், தொங்கு மாலை கூடிய சிகரமும் அதன் மேல் பத்மம் கட்டுமாலை, கண்ணாடி சட்டம் மகாபத்தம் அதன் மேல் ஸ்தூபி என்ற கலசமும் அமைந்துள்ளது. சிகரத்தின் மகா நாசிப் பகுதியில் கீழ் பத்மம், இடைகட்டு, மேல் பத்மம் மற்றும் முகமும் உள்ளது. இந்நாசிப் பகுதியில் கிழக்கு புறம் உமா சகிதரும், தென்புறம் தட்சிணாமூர்த்தியும் அவர் கையில் நாகம், மான் மற்றும் அபய முத்திரையும், ஓடும் உள்ளது. வல்லார்கள் நால்வரும் உள்ளனர். மேலும் மேற்கு புறம் விஷ்ணுவும், வடபுறம் பிரம்மாவும் உள்ளனர். தளப்பகுதியின் நான்கு முனைகளிலும் கல்லால் செய்யப்பட்ட நந்தி காணப்படுகிறது.

திருச்சுற்று மாளிகை

கருவறை சுற்றியுள்ள திருச்சுற்றில் நவகிரகம், நாயன்மார்கள், விநாயகர், செப்புத் திருமேனிகள், வேதகிரீஸ்வரர், வேணுகோபாலர், விஸ்வநாதர், வள்ளி, தெய்வயானையுடன் முருகன், சண்டேசர், நடராஜர், பைரவர், சூரியன் ஆகிய இறை உருவங்கள் காட்சிதருகின்றன. மேலும் திருச்சுவற்றில் நுழைவு வாயிலில் மயூர சுப்பிரமணியரும், நர்த்தன கணபதியும் உள்ளனர். அதுபோல் கருவறையின் நுழைவுவாயிலில் துவாரபாலகர்கள் இருவர் உள்ளனர். தென்புறத்தில் கஜலட்சுமி வீற்றிருக்கிறாள். இக்கஜலக்ஷ்மி பிற்காலத்தில் வைக்கப்பட்டது ஆகும். உட்பிரகாரத்தில் சதுரம், எட்டுபட்டை சதுரம், எட்டுபட்டை, சதுரம் மற்றும் வெட்டு போதிகையுடன் கூடிய தூண்கள் உள்ளன. இப்பிரகாரத்தின் தென்பகுதியில் பிரம்மோற்சவ மண்டபம் நூதனமாய் கட்டப்பட்டுள்ளது.

அம்மன் கருவறை

அம்மன் கருவறை வன்மீகநாதர் கருவறைக்கு எதிர் வலப்புறத்தில் அமைந்துள்ளது. கருவறையில் உள்ள அம்மன் வன்மீகபுர நாயகி என்றும், முத்தாம்பிகை (ARE. No. 445) என்றும், கல்வெட்டில் ‘பள்ளியறை நாச்சியார்’ என்றும் அழைக்கப்படுகிறார். அம்மன் சந்நதிக்கு தனித்திருச்சுற்றும், இரண்டு தள விமானமும், வட்ட வடிவ சிகரமும், கலசமும் உள்ளது. விமானத்தின் நாசிப்பகுதியில் தேவியின் வடிவங்களும், யாளி உருவமும் காணப்படுகின்றன. கருவறையின் எதிரே சர்வ வாத்திய மண்டபம் அமைந்துள்ளது. நான்கு வரிசையாக மூன்று தூண்கள் என

மொத்தம் 12 தூண்கள் உள்ளன. உள்ளிரு வரிசை தூண்கள் குதிரையுடன் விளங்குகின்றன. உள்ளது. இந்த 12 தூண்களும் இச்சர்வ வாத்திய மண்டபமும் பிற்காலக் கலை வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளன.

இத்தூண்கள் அசுவபாதம், சதுர கருக்கு, நாக பந்தம், 8 பட்டை இடை கட்டு, 16 பட்டை இடை கட்டு, பூமுனை, சிற்பம், பூமுனை, 16 பட்டை இடை கட்டு, 8 பட்டை இடை கட்டு, 16 பட்டை இடை கட்டு, பூமுனை, சதுரப்பகுதி, பூமுனை போதிகை, அனி ஒட்டி காலில்- பீடம், குதிரை வீரன், உத்ரம், கபோதம், வியாளி வரி போன்ற அமைப்புடன் காணப்படுகின்றன.

இத்தூண்களில் - மனுநீதி சோழன் கதை, சிறு தொண்டர் புராணக்கதை, கஜ சம்காரமூர்த்தி, சப்தமாதர்கள், மகிஷாசுரமர்த்தினி, திரிபுராந்தகர், வீரபத்திரர், மீனாட்சி திருக்கல்யாணம், தேவி, பைரவர், பிரம்மா, நடராஜர், காலசம்காரர், வரதராஜர், வேணுகோபாலர், ஏகபாத மூர்த்தி, விநாயகர், துர்கை, அர்த்தநாரீஸ்வரர், ஊர்த்துவ தாண்டவர், நரசிம்மர் போன்ற சிற்பங்கள் தூணின் சதுர் பகுதியில் செதுக்கப்பட்டுள்ளன. சர்வ வாத்திய மண்டபத்தையும் கோபுரத்தையும் பிற்காலத்தில் எழுப்பப்பட்ட மண்டபம் ஒன்று இணைக்கிறது.

வெளித்திருச்சுற்று

வெளித்திருச்சுற்று சுவர் கோயிலின் சுற்றுச் சுவராக உள்ளது. இங்கு கருவறையைச் சுற்றிலும் பலிபீடங்கள் காணப்படுகின்றன. தென்புறத்தில் 11 உதிரிசிற்பங்கள்

வைக்கப்பட்டுள்ளன. அவை, 1) துர்கை, 2) அய்யனார், 3) பிராம்மி, 4) தேவி, 5) கௌமாரி, 6) வைஷ்ணவி, 7) வராகி, 8) மகேஸ்வரி, 9) சாமுண்டா 10) சம்பந்தா, 11) சேஷ்டா ஆகும். சேஷ்டா மிக உயரமாக மாந்தன், மாந்தியுடனும் ஒரு கையில் பூவுடனும் மறுகையை மடக்கிய நிலையிலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

1. துர்கை

துர்கை நான்கு கரங்களுடன், கிரீட மகுடம் தலையில் சூடியவாறு, வலது கரம் அபயமாகவும், மேற்கரம் சக்கரத்துடனும், இடது கரம் வரதமாகவும், மேற்கரம் சங்கு வைத்துக் கொண்டும் காணப்படுகிறது. இச்சிற்பம் பத்மபீடத்தில் நின்ற நிலையில் அமைந்துள்ளது.

2. பிராம்மி

பிரம்மனுக்குரிய ஜடா மகுடத்துடன், நான்கு கரங்களுடன் அமர்ந்த நிலையில் பிராமி சிற்பம் உள்ளது. இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கவிட்டு பத்மபீடத்தில் அமர்ந்த நிலையில் காணப்படும் இச்சிற்பம் இடதுகீழ்க் கரம் வரதமாகவும் மேற்கரம் குண்டிகை (கமண்டலம்) பிடித்த வண்ணமும் அமையப்பெற்றுள்ளது. வலது மேற்கரம் அக்கமாலையுடனும், வலதுகீழ்க் கரம் அபயம் வழங்கும் வண்ணமாக சாந்தத்துடன் காணப்படுகிறது. இச்சிற்பம் முழுமை பெற்றுத் திகழ்கிறது.

3. இந்திராணி

மங்கலமுகத்துடன் தலையில் கரண்ட மகுடம் தாங்கியுள்ளாள். நான்கு கரங்களில், வலது மேற்கரம் சூலம் / வஜ்ஜிரம் வைத்தும் கீழ்க்கரம் அபயம் அளிக்கும்படி

காணப்படுகிறாள். இடதுகீழ்க் கரம் வரதமாகவும், மேற்கரம் அம்பை வைத்தவாறு வலது காலைத் தொங்கவிட்டு இடது காலை மடக்கி பத்மபீடத்தில் அமர்ந்த நிலையில் வீற்றிருக்கிறாள்.

4. கௌமாரி

முருகனின் கரண்ட மகுடத்தை அணிந்தவளாய் நான்கு கைகளுடன் காதுகள் இரண்டிலும் குண்டலம் அணிந்துள்ளாள். வலதுகீழ்க் கரம் அபயம், மேற்கரம் சக்தி ஆயுதம் தாங்கியவண்ணம் அமைந்துள்ளது. இடதுகீழ்க் கரம் வரத முத்திரை, மேற்கரம் வஜ்ஜிரம் வைத்துத்திகழும். இவள் வலது காலைத் தொங்கவிட்டு இடது காலை மடக்கி பத்மபீடத்தில் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறாள்.

5. வைஷ்ணவி

விஷ்ணுவின் ஆயுதங்களை தனது கரங்களில் கொண்டு, கிரீட மகுடத்தை சூடிய வண்ணம் அமர்ந்த நிலையில் உள்ளாள். வலதுகீழ்க்கரம் அபயம் அளிப்பது போன்றும், மேற்கரம் சக்கரத்தை இருவிரலில் பற்றிய நிலையிலும் காணப்படுகிறது. இடதுகீழ்க் கரம் வரதமாகி மேற்கரத்தில் அங்குசம் வைத்து காணப்படுகிறது. அனைத்து ஆபரணங்களையும் அணிந்து அலங்காரத்துடன் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கவிட்டு பத்மபீடத்தில் விளங்குகிறாள்.

6. வராகி

பன்றி முகத்துடன், கரண்ட மகுடம் தலையில் அணிந்தவாறு நான்கு கரங்களுடன் கூடியவள். வலது கரத்தில் உலகைத்

தாங்கியுள்ளாள். இடது தன் கரம் வரதமாகியும், மேற்கரம் கலப்பையை பிடித்து, வலது காலைத் தொங்கவிட்டு, இடது காலை மடக்கி காணப்படுகிறாள். கம்பீரத் தோற்றத்துடன் பத்ம பீடத்தில் அமர்ந்த நிலையில் உள்ளாள்.

7. மகேஷ்வரி

நான்கு கரங்களுடன் ஜடா மகுடம் அணிந்தவராய் மார்பில் கச்சை அணிந்துக் காணப்படுகிறாள். காதுகளில் மகர குண்டலம், பத்ர குண்டலம் ஆகியவற்றையும், தோள்வளை, கைவளை அணிந்துக் விளங்குகிறாள். வலது கரம் அபயமாகவும், மேற்கரம் கோடாரியும், இடது கரம் வரதம் மேற்கரம் மான் ஆகியவற்றை தாங்கியுள்ளாள். தலையில் பிறையை சூடி, வலது காலைத் தொங்கவிட்டு, இடது காலை மடக்கிய வண்ணம் பத்ம பீடத்தில் அமர்ந்துள்ளாள்.

8. சாமுண்டி

இரு உக்கிர விழிகளைக் கொண்டு எரித்த பார்வையுடன், கோரப்பற்களைக் கொண்டவராய் தீச்சுடரை தனது தலைக்கு மேல் சூடிக் காணப்படுகிறாள். நான்கு கரங்களுடன் ஆக்ரோஷமாக அமர்ந்துள்ளாள். வலது கரத்தில் சூலம், மேற்கரம் உடுக்கையில் பாம்பு சுற்றிய வண்ணம் காணப்படுகிறது. இடது கரத்தில் மண்டையோடும், மேற்கரத்தில் பாசக்கயிறை வைத்து, வலது காலைத் தொங்கவிட்டு இடது காலை மடக்கி பத்மபீடத்தில் அமர்ந்து காணப்படும். இச்சிற்பம் முழுமை பெற்றதாய் உள்ளது.

9. சம்பந்தர்

இளமை ததும்பும் குழந்தை உருவில் நிர்வாணத் தோற்றத்தில், சடைமுடி தலையில் உள்ளவாறு காணப்படுகிறார். இருகரங்களை உடையவராய் வலது கரத்தில் ஓலைச் சுவடி, இடது கையில் (தாளம்) வைத்து பத்ம பீடத்தில் நின்ற நிலையில் உள்ளார்.

10. சேஷ்டா தேவி (மூத்த தேவி)

சேஷ்டா தேவியானவள் உக்கிர முகத்துடன் தலையில் தீச்சுடர் சூடியவளாய், குண்டான உடலுடன் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கவிட்டுக் காணப்படுகிறார். இருகரங்களை உடையவள், மார்பகத்தில் கச்சை அணிந்துக் காணப்படுகிறாள். வலது கரம் மலர் வைத்தும், இடது கரம், மடித்து தொடை மீது வைத்து அமர்ந்த நிலையில் பத்ம பீடத்தில் வீற்றிருக்கிறாள். இச்சிற்பம் முழுமை பெற்று காணப்படுகிறது. மாந்தன் மாந்தி இருவரும் அருகில் உள்ளனர்.

மடப்பள்ளி யாகசாலை

மடப்பள்ளியானது கோயிலின் தென் கிழக்கு மூலையிலும், யாகசாலை வடகிழக்கு மூலையிலும் அமைந்துள்ளது. இவ்விரு இடங்களும் இன்று பழுதடைந்த நிலையில் உள்ளது.

கொடி மரம், நந்தி மண்டபம், பலிபீடம்

இம்மூன்றும் கருவறைக்கு நேர்க்கிழக்கே மற்றும் சர்வ வாத்திய மண்டபத்தின் பக்கவாட்டில் அமைந்தவாறு காணப்படுகின்றன். நந்தி மண்டபம் எவ்வித பீடமும் இன்றி

தரையில் உள்ளது. கொடி மரம் சுமார் 30 அடி உயரத்துடன் பீடத்தின் மேல் வைக்கப்பட்டுள்ளது. அதனை அடுத்து ஒரு பலி பீடமும் உள்ளது.

கோயிலின் கோபுரத்தின் முன் வலப்பகுதியில் முன் மண்டபத்துடன் கூடிய பிற்கால கட்டுமான கோயில் ஒன்று இருக்கிறது. அம்மண்டபத்தின் மேல் நந்தி ஒன்று காணப்படுகிறது. அதன் பின் பகுதியில் கோயிலின் திருக்குளமும், உள்ளது. கருவறையின் வடக்குப் பகுதியில் நந்தவனம் ஒன்றும் உள்ளன.

‘ஸ்ரீ’சக்கரம்

இக்கோயிலின் வெளிப்பிரகரத்தில் முருகன் சந்நிதிக்கு அருகில் கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு ‘ஸ்ரீ’ சக்கரம் ஒன்று ஓவியமாக உள்ளது. அதன் முதல் வரிசையில் கிரந்த உயிர், மெய் எழுத்துகள் காணப்படுகின்றன. அதன் உட்பகுதி சிதைந்த நிலையில் காணப்படுவதால் அதை சரியாக வாசிக்க முடியவில்லை. இருப்பினும் கோ.மு. முத்துசாமி பிள்ளை, ஆ.ப.(ஓய்வு) அவர்கள் எழுதிய “கோயிற் களஞ்சியம், அறிமுகம்” என்ற நூலில் சக்கர வழிபாடு பற்றிச் சிறப்பாக கூறியுள்ளார். அதாவது நம் உடலில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகம், விசுத்தி எனும் சக்கரங்கள் உள்ளன. இவற்றின் வரிவடிவம்தான் சக்கரம் ஆகும். அவற்றில் மேருப்பதஸ்தார, கயிலாசட் பிரஸ்தார, பூப்பிரஸ்தார என்ற மூன்று பிரிவுகள் உண்டு, மேலும் சக்கர வழிபாடு சக்தியின் வழிபாட்டுக்கு முக்கியத்துவம் ஆகும். பண்டைய காலம் தொட்டே சக்கர வழிபாடு பரவியிருந்தது. சிவன் கோயில்களிலும் தேவி கோயில்களிலும் திருவுருவங்கள்

நிறுவுவதற்கு முன்னர் யந்திரங்களை நிறுவும் வழக்கம் உண்டு. இத்தகைய யந்திரங்கள் நிலத்தின் அடியில் இருக்கும் வெளியில் தெரியாது. தேவி ஆலயத்திலும் யந்திரங்கள் வெளியில் தெரியும் வண்ணம் வெளியே வைத்து அவற்றிற்கும் பூசை செய்யப்படுவதும் உண்டு. திருமூலதேவ நாயனார் சக்கரத்தைப் பற்றித் தமது திருமந்திரத்தில் திரிபுறை சக்கரம் எனும் பகுதியில் விரிவாகக் கூறியுள்ளார்.

தத்துவ முறையில் நோக்கில், ஐந்து முனைச் சக்தி சக்கரம் பஞ்சபூதங்களைக் குறிப்பிடப்படுகிறது. நான்கு முனைச் சிவசக்கரம், மாயை, சுத்த வித்யை, மகேசுவரர், சதாசிவர் ஆகிய தத்துவங்களைக் குறிக்கின்றன. ஐம்புலன்களை வென்று பஞ்ச பூதங்களினால் பாதிக்கப்படாமல் மாயையை அகற்றி ஆனந்த வடிவான இறைவனுடன் ஒன்று படுதலே 'வீடு' என்னும் தத்துவத்தைச் ஸ்ரீ சக்கரம் அறிவிக்கிறது.

ஸ்ரீ சக்கர வழிபாடு எல்லாத் தேவதைகளுக்கும் உகந்ததாகக் கருதப்படுகிறது. இவ்வழிபாட்டினைக் கைக்கொள்ளத் தகுந்த மனநிலையும், நம்பிக்கையும், கொள்கைப் பிடிப்புமே தேவை. ஆண் பெண் வேறுபாடின்றி குலம், கோத்திரம் வேறுபாடின்றி அனைவரும் கைக்கொள்ளலாம். ஆனால், இதனைத் தகுந்த குருமார்களிடம் உபதேசம் பெற்ற பின்னரே, கைக்கொள்ள வேண்டும் என்ற விதிமுறையும் உண்டு. எந்த ஊரிலும் எந்த இடத்திலும் செய்யத்தக்க இக்காலத்திற்கேற்ற வழிபாட்டு முறை ஸ்ரீ சக்கர வழிபாடே ஆகும் என்று அறிஞர்களால் கருதப்படுகிறது.

5. சிற்பங்கள்

கட்டடக் கலைக்கு அடுத்தபடியாக உள்ளது சிற்பக்கலை, கட்டடக்கலையைவிட சிற்பக்கலை நுட்பமானது. சிற்பக் கலையானது கண்ணையும், கருத்தையும் கவர்ந்து இன்பம் கொடுக்கும் இனிய கலையாகும். அவற்றின் அழகும் அமைப்பும் எல்லோருக்கும் உணர்ச்சி கொடுத்து மகிழ்வூட்டுகின்றன. ஆனால் அவற்றில் சிறிது கருத்தூன்றி காண வேண்டும். அவ்வகையில் செய்யூரில் உள்ள சிற்பங்களையும் மிக அழகுடன் கலைநயத்துடன் செதுக்கியுள்ளனர்.

துவாரபாலகர் (வலது)

அகன்று விரிந்த கண்களும் (உக்கிரப் பார்வை), நீண்ட மூக்கும் கொண்ட துவாரபாலகர் தலையில் ஜடா மகுடம் அணிந்து தனது இடது பாதத்தை சற்றே வளைத்த வண்ணம் நேரே ஊன்றி நின்ற நிலையில் வலது பாதத்தைத் தூக்கி கதை மீது வைத்துள்ளார். இரு காதுகளிலும் பத்ர குண்டலங்கள் அணிந்துள்ளார். கரங்களில் முறையே தனது வலது கீழ்க்கரத்தில் நீலோத்பவ மலரைப் பிடித்தும், இடது கீழ்க்கரத்தை கதை மீது ஊன்றிய வண்ணம், தனது மேல் இரு கரங்களும் பதாகை முத்திரையுடன் காட்சியளிக்கிறார். கழுத்தை ஒட்டியவாறு கண்டிகையும், அதை ஒட்டியே சரப்பளியும் (கிரை வேய ஹாரம்) அணிந்துள்ளார். அகன்று விரிந்த மார்பில் பூணூல் தரித்துள்ளார். தோள்வளை மற்றும் கை வளைகளை அணிந்து வக்கிரப்

பார்வையுடன் கூடிய இவர் இடைக் கட்டுடன் கூடிய இடையை சற்றே வளைத்த தொடையுடன் ஆடையை அணிந்துள்ளார். இது ஒரு முழுச் சிற்பம் கிடையாது. புடைப்புச் சிற்பமே! கதை மீது வைத்திருக்கும் இடது கரத்தில் பாம்பு சுற்றி கீழே தொங்கி படமெடுக்கும் வண்ணம் அமைந்துள்ளது. இச்சிற்பத்தின் பின்னே பிரபாவளி போன்று அமைக்கப்பட்டு அழகிய தோற்றத்துடன் காணப்படுகிறது.

துவாரபாலகர் (இடது)

அகன்று விரிந்த இரு கண்களும், நீண்ட மூக்கும் இரு காதுகளிலும் பத்ர குண்டலங்கள் அணிந்து காணப்படும் இவர் உயரமானகாவும், சிறிது மெல்லியத் தோற்றத்துடனும் காணப்படுகிறது. நான்கு கரங்களைக் கொண்டு விளங்கும். இவர் கீழ் கரங்களில் முறையே வலது கரம் கதை மீது ஊன்றியவாறும் மேல் இரு கரங்களில் நாக பாம்பைப் பிடித்தவாறும் செதுக்கப்பட்டுள்ளார். இவர் நின்ற நிலையில் வலது காலை சற்றே வளைத்து நேரே ஊன்றியும், தனது இடையை சற்று திருப்பி இடது பாதத்தை சற்று தூக்கி கதை மீது வைத்தும் காட்சியளிக்கிறார். கடவுளருக்குரிய அனைத்து ஆடை ஆபரணங்களையும் அணிந்துள்ளார். அவ்வகையில் இவர் கண்டிகை, சரப்பளி, வாகுமாலை முதலியவற்றையும் மார்பில் பூணூலும் தரித்துள்ளார். இடைக்கட்டுடன் கூடிய இவர் ஜடாமகுடம் சூடியுள்ளார். இது ஒரு புடைப்புச் சிற்பம் ஆகும். தொடையிடைக் கூடிய ஆடை அணிந்துள்ளார். கைவளை தோள்வளை அனைத்து ஆபரணங்களுடன் காட்சியளிக்கும் இவரின் பின்புறம் பிரபாவளி

போன்று அமைக்கப்பட்டுள்ளது. அழகியத் தோற்றத்துடன் கூடிய இச்சிற்பம் கருவறையின் இடது புறம் நின்ற நிலையில் அமைந்துள்ளது.

கணபதி

கருவறையின் அர்த்தமண்டபத்தின் தேவகோஷ்டத்தில் புடைப்புச் சிற்பமாக கணபதி அமைந்துள்ளார். யானை முகமும் மூன்று கண்களுடனும் மற்றும் நான்கு கரத்துடன் இடது காலை ஊன்றி வலது காலை சற்று குஞ்சிதமாக மடக்கி வைத்து அமர்ந்த நிலையில் மகர பூரிமத்துடன் கூடிய கரண்ட மகுடத்தால் அலங்கரிக்கப்பட்டுள்ளார். வலது கீழ்க்கரத்தில் மாம்பழம் வைத்துள்ளார். அதன்மேல் துதிக்கை வைக்கப்பட்டுள்ளது. வலது மேற்கரத்தில் (அக்ஷமாலை) அக்கமாலை பிடித்துள்ளார். இடது கீழ்க்கரத்தில் உடைந்த தந்தத்தை வைத்துள்ளார். இதன் மேற்கரத்தில் அங்குசம் பிடித்தவாறு காட்டப்பட்டுள்ளது. கழுத்துப் பகுதியில் சரப்பளி போன்ற அணிகலன்கள் மற்றும் முப்பிரிகை பூணூல் அணிந்துள்ளார். வயிற்றுப் பகுதியில் இடைக்கட்டு அமைப்புக் காணப்படுகிறது. கைகளில் காப்பு, தோள்வளை, பாதங்களில் காப்பு (கழல்) போன்றவைகளை அணிந்து புடைப்புச் சிற்பமாகக் காணப்படுகிறார்.

தட்சிணாமூர்த்தி

கருவறையின் தென்புறச் சுவரில் தேவகோஷ்டத்தில் புடைப்பு சிற்பமாக தட்சிணாமூர்த்தி வீற்றிருக்கிறார். அழகிய சிரித்த முகமும், இரண்டு கண்களும் கூடிய தட்சிணாமூர்த்தி ஆலமரத்தின் கீழே அமர்ந்திருப்பது போன்று அமைக்கப்பட்டுள்ளார். இச்சிற்பம் தேவகோஷ்டத்தில் அமர்த்தப்பட்டுள்ளது.

நான்கு கரங்களை உடைய இவர் தனது கீழ்க்கரங்களில் முறையே வலது கரம் சின்முத்திரையிலும் இடது கரத்தில் சுவடியையும் பெற்றுள்ளார். மேற்கரங்களில் வலது கரத்தில் பாம்பும், இடது மேற்கரத்தில் தீச்சுடரும் பெற்றுள்ளார். தனது இடது காலைத் தொங்கவிட்டு முயலகனின் மீது அழுத்தியிருப்பது போன்றும் வலது காலை மடித்து இடது காலின் மீது வைத்து வீராசனத்தில் அமர்ந்திருக்கிறார். ஜடாபாரம் அணிந்துள்ளார். தனது வலது காதில் மகர குண்டலமும், இடது காதில் பத்ர குண்டலமும் அணிந்துள்ளார். அனைத்து ஆபரணங்களையும் அணிந்துள்ளார். கழுத்தை ஒட்டியவாறு கண்டிகையும், அதன் கீழே சரப்பளியும், முத்துமாலையும் அணிந்து மென்மையான தனது உடலின் மீது பூணூல் தரித்துள்ளார். அதன் கீழே இடைகட்டும் அணிந்துள்ளார். வாகுமாலையும் சரிந்த தோள் மீது தோள்மாலையும் கைவளையும் அணிந்துள்ளார். புலித்தோலாடை உடுத்தியுள்ளார்.

இச்சிற்பத்தின் பின்னே ஆலமரம் காட்டியுள்ளனர். இதன் அடியில் அமர்ந்து வேதங்களைக் கற்றுக்கொடுப்பது போன்று அமைந்துள்ளது. இடது பாதத்தின் அடியில் இருக்கும் முயலகன் (பூதகன்) இரண்டு கரங்களுடன் தனது தலையை நிமிர்த்தி மேல் நோக்கிப் பார்ப்பது போன்று படுத்த நிலையில் உள்ளது. இது ஒரு புடைப்புச் சிற்பம் ஆகும்.

லிங்கோத்பவ மூர்த்தி

கருவறையின் பின்புறச் சுவரில் புடைப்புச் சிற்பமாகச் லிங்கோத்பவமூர்த்தி அமைந்துள்ளது. தேவக்கோஷ்டத்தில் காணப்படும் இச்சிற்பம் லிங்கத்தைப் பிளந்து வெளியே தோன்றி

காட்சியளிப்பது போன்று காணப்படுகிறது. அழகிய இரு கண்களும், கூரிய மூக்கும், சிறிய வாயையும் கொண்டு புன்சிரிப்போடு கூடிய இச்சிற்பம் சமபாத ஸ்தானதகத்தில் அமைந்துள்ளது. இரு பாதங்களும் லிங்கத்தினுள் மறைந்திருப்பது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. நான்கு கரங்களைக் கொண்ட இவர் தனது கீழ்க்கரங்களில் முறையே வலது கரம் அபய முத்திரையும், இடது கரம் கடி கஸ்திரத்துடனும் மேற்கரங்களில் முறையே இடது மேற்கரத்தில் மானும், வலது மேற்கரத்தில் மழுவும் தாங்கியுள்ளார். தலையில் ஜடாமகுடம் அணிந்துள்ளார். ஆபரணங்களில் கண்டிகை, சரப்பளி (கிரை வேய ஹரம்) அணிந்துள்ளார். அகன்று விரிந்த மார்பில் பூணூல் தரித்துள்ளார். வாகுமாலை அணிந்துள்ளார். இவர் சரிந்த தோள்மீது தோள்மாலை அணிந்துள்ளார். கைவளை மற்றும் இடைக்கட்டு அணிந்துள்ளார். புலித்தோலாடை அணிந்து அதில் கட்டப்பட்டுள்ள இடைக்கட்டு (வஸ்தரம்) இரு பக்கமும் கீழே தொங்கும் வண்ணம் அமைந்துள்ளது. ஒரு பெரிய லிங்கத்தினுள் நின்றிருக்கும் இவரின் தலைக்கு மேல் பிரம்மா நான்கு தலைகளுடன் இரண்டு இறக்கைகளைக் கொண்டு இரு கைகளை கூட்டிய (அஞ்சலி ஹஸ்தம்) வண்ணம் மேலே பறந்து செல்வது போன்று அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் பாதத்தின் கீழே விஷ்ணு வராஹ அவதாரம் எடுத்தும் கீழே செல்வது போன்றும் இவருக்கு நான்கு கரங்களும் அதில் கீழ் இரு கரங்கள் அஞ்சலி ஹஸ்தமும் மேற்கரங்களில் வலது கரத்தில் சக்கரமும், இடது கரத்தில் சங்கும் தரித்து தலையில் கிரீட மகுடம் கொண்டும் காட்சியளிக்கிறார். இம்மூன்றும் சிற்பங்களும் ஒரே லிங்கத்தில் இருப்பது போன்று அழகாக அமைக்கப்பட்டுள்ளது.

பிரம்மா

கருவறையின் வடபுறச் சுவரில் புடைப்புச் சிற்பமாக அமைந்துள்ளது. அழகிய நான்கு முகங்களும், நான்கு கரங்களும் கொண்டு சமபாத ஸ்தானகத்தில் பத்ம பீடத்தில் நின்றிருக்கும் கோலம். அழகிய இரு கண்களை உடைய இவர் ஜடாமகுடம் அணிந்துள்ளார். தேவகோட்டத்தில் இச்சிற்பம் வைக்கப்பட்டுள்ளது.

தனது கரங்களில் முறையே கீழ் வலது கரம் அபய முத்திரையாகவும், இடது கீழ் கரம் ஊரு ஹஸ்தமும் மேற்கரங்களில் வலது மேற்கரத்தில் அக்ஷமாலையும், இடது மேற்கரத்தில் கமண்டலமும் கொண்டுள்ளார். மூன்று முகங்கள் மட்டும் தெரிவது போன்றும் ஒரு முகம் பின் மறைந்திருப்பது போன்றும் அமைக்ககப்பட்டுள்ளது. பட்டு பீதாம்பரத்தோடு அனைத்து ஆடை ஆபரணங்களையும் அணிந்துகாட்சிதருகிறார். கழுத்தை ஒட்டியவாறு கண்டிகையும், சரப்பளியும் காணப்படுகிறது. முத்துமாலை மற்றும் தனது அகன்ற மார்பில் பூணூலும் தரித்துள்ளார். இடை கட்டு அணிந்துள்ளார். தோள்மாலை மற்றும் கைவளை அணிந்து அபயம் வழங்கி மக்களைப் படைக்கும் தொழிலைச் செய்யும் இவர் சாந்தமான நிலையில் நின்றிருக்கிறார்.

விஷ்ணு துர்க்கை

கருவறையின் அர்த்த மண்டபத்தின் வடக்குப் பக்கம் புடைப்புச் சிற்பமாக விஷ்ணு துர்க்கை அமைந்துள்ளாள். அழகிய முகத்துடன் தலையில் கரண்டமகுடம் அணிந்து, நான்கு கைகளை உடையவளாய், நின்ற நிலையில் சமபாதக ஸ்தானத்தில் காணப்படுகிறாள். வலது கீழ்கரம் கடி ஹஸ்தமாய் தொடைமீது

வைத்துள்ளவாறு காணப்படுகிறது. வலது மேற்கரத்தில் விஷ்ணுக்குரிய ஆயுதமான சங்கு வைத்துள்ளார். இடது கீழ்க் கரத்தில் அபயம் வழங்குமாறும், மேற்கரத்தில் சக்கரம் பிடித்தவாறும் உள்ளது.

காதுகளில் மகரகுண்டலங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளார். இச்சிற்பத்தின் கழுத்தில் ஒட்டியவாறு சரப்பளி, கண்டிகை போன்ற ஆபரணங்கள் நிறைந்துள்ளது. மார்பில் (ஸ்தனகட்டு) கச்சை அணிந்துள்ளார். தோளில் தொடங்கி இடுப்பு வரை முப்புரிநூல் அணிந்துள்ளார். இடையில் வஸ்திர கட்டுகளுடன் பாதம் வரையில் ஆடைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கைவளை தோள்வளை அணிந்து பத்ம பீடத்தில் நின்றவாறு அமைந்துள்ளது.

விநாயகர்

கருவறையின் திருச்சுற்று மாளிகையில் தென்மேற்கு மூலையில் பரிவார தேவதையாக விநாயகர் அமைந்துள்ளார். யானை முகமும், நான்கு கரங்களையும் கொண்டு லலிதாசனத்தில் பத்ம பீடத்தில் இச்சிற்பம் அமைந்துள்ளது. தனது கரங்களில் முறையே கீழ் வலது கரத்தில் ஒடிந்த தந்தமும், இடது கீழ்க்கரத்தில் மோதகமும், மோதகத்தில் துதிக்கையை வைத்திருப்பது போன்றும், மேல் வலது கரத்தில் பாசமும் கொண்டுள்ளார். தலையில் கரண்ட மகுடம் அணிந்துள்ளார். அகன்ற பெரிய யானை காதுகளைப் பெற்றுள்ளார். இரு கண்களை உடைய இவரது வலது தந்தம் ஒடிந்த நிலையிலும், இடது தந்தம் முழுமையாகவும் உள்ளது. ஆபரணங்களில்

கண்டிகை, சரப்பளி, பூணூல், இடை கட்டு. கைவளை மற்றும் தோள் மாலையும் அணிந்துள்ளார். பெரிய வயிற்றை உடைய இவர் அனைத்து வித ஆடை ஆபரணங்களோடு அழகாக அமர்ந்திருக்கிறார். இது ஒரு முழு உருவச் சிற்பம் ஆகும்.

வேணுகோபாலர், வேதகிரீஸ்வரர், விஸ்வநாதர்

கருவறையின் நேர் பின்பக்கம் திருச்சுற்று மாளிகையில் இவர்கள் அமைந்துள்ளார்கள். வேணுகோபாலர் தலையில் கிரீடமகுடம் தாங்கி, நான்கு கைகளுடன் நின்றவாறு உள்ளார். திரிபங்கத்தில் அமைந்த இச்சிற்பத்தின் வலது கால் இடது புறமாக ஊன்றிருப்பது போன்றும் இடது கால் மையப்பகுதியில் வலது புறம் பார்ப்பதைப் போன்றும் பாதம் அமைந்துள்ளது. வலது, இடது தன் கரங்களில் புல்லாங்குழல் வைத்துக் கொண்டு அதன் ஒருமுனையை வாயில் வைத்து இசைக்கின்றவாறு அமைந்துள்ளது. இடது மேற்கரத்தில் சங்கும், வலது மேற்கரத்தில் சக்கரமும் உள்ளது. தோள்வளை, கைவளை மற்றும் கழுத்தை ஒட்டியவாறு சரப்பளி, கண்டிகை போன்ற அணிகலன்கள் அலங்கரிக்கின்றன.

கணுக்கால் வரையில் ஆடை அணிந்துள்ளார். இடையில் அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. வேணுகோபாலரின் பின்புறம் பசு வலது புறம் முகத்தை குனிந்து வைத்திருக்கும்படி இச்சிற்பம் அமைந்துள்ளது. பத்ம பீடத்தில் நின்ற நிலையில் முழுச் சிற்பமாக காணப்படுகிறாள்.

சதுர வடிவத்தில் நான்கு பகுதிகளைக் கொண்டவாறு ஆவுடையாருடன் கோமுகம் இடது புறம் இருப்பதைப் போன்று

அமைந்துள்ளது. ஆவுடையின் மேல் தண்டு பகுதியில் விஷ்ணு பாகமும், ருத்ர பாகம் மட்டும் தெரிகின்றது. விஸ்வநாதர் யோனி நீள்வட்ட வடிவில் அமைந்துள்ளது. கோமுகை இடதுபுறமாக அமைந்துள்ளது. ஆடையின் மேல் பகுதியில் மையமாக ருத்ரபாகம் மட்டும் உள்ளவாறு லிங்கப் பகுதி சிறியதாக உள்ளது. இடைகட்டு பத்மம் போன்ற அமைப்புடன் லிங்கபீடம் அமைந்துள்ளது.

முருகன், வள்ளி தெய்வயானை

கோயிலின் திருச்சுற்று மாளிகையில் வடமேற்கு மூலையில் தனியாக வள்ளி தெய்வயானையுடன் பரிவார தேவதைகளாக உள்ளனர். முருகன் கரண்ட மகுடம் தலையில் சூடியவாறு நான்கு கைகளுடன் (சமபாதக ஸ்தானத்தில்) கம்பீரமாக நின்ற நிலையில் காணப்படுகிறார்.

வலது தன் கரம் அபயம் வழங்குமாறு அபய முத்திரையுடன், மேல் கரம் வஜ்ஜிரம் தாங்கியும், இடது தன் கரம் தொடைமீது உள்ளவாறு கடி ஹஸ்தமாகவும் உள்ளது. மேற்கரம் சக்தி ஆயுதத்தை இரு விரல்களில் பிடித்தவாறு அமைந்துள்ளது. காதணிகள், குண்டலம், கழுத்தில் சரப்பளி, கண்டிகை போன்ற ஆபரணங்களை அணிந்துள்ளார். மார்பின் வழியாக பூணூல் இடைவரை செல்கிறது. இடை கட்டு, இடை அணிகலன்கள் அணிந்துள்ளார். வஸ்திரகட்டுடன் இடையிலிருந்து, கணுக்கால் வரை ஆடை அணிந்து அலங்கரிக்கப்பட்டுள்ளது.

முருகனின் பின்புறத்தில் இடைவரை உயரம் உடைய மயில் வாகனமாக உள்ளது. மயிலின் முகம் வலது புறம் பார்த்தவாறும், அதன் தோகை விரித்த வண்ணம் இடது புறம் அமைந்து கம்பீரமாக நின்ற நிலையில் உள்ளது.

வள்ளி முருகனின் இடது புறத்தில் நின்ற நிலையில் உள்ளாள். வள்ளியின் தலையில் கரண்ட மகுடத்துடனும், இரண்டு கைகளை உடையவளாய் காணப்படுகிறாள். மார்பில் கச்சை அணிந்துள்ளாள். வலது கரம் முழங்கால் வரை தொங்கிய நிலையில் லோல ஹஸ்தம் தாங்கிய வண்ணம் அமைந்துள்ளது. இடது கையில் கருநீலோத்பல மலர் பிடித்த வண்ணம் உள்ளது. இரு காதுகளிலும் மகர குண்டலங்களும், தோள்வளை, கைவளை மற்றும் கழுத்தணிகளுடன் அழகுடன் நின்ற நிலையில் திகழ்கிறாள்.

தெய்வயானை முருகனின் இடது புறத்தில் கால்களை சற்று இடைவெளியுடன் வைத்த வண்ணம் நின்ற நிலையில் உள்ளாள். இரண்டு கைகளைக் கொண்டும், தலையில் கரண்ட மகுடத்துடன் காணப்படுகிறாள். இடது கரம் டோல ஹஸ்தமாகவும், வலது கரத்தில் தாமரை மலர் மலர்ந்த நிலையில் உள்ளவாறும் வைக்கப்பட்டுள்ளது. மார்பகங்களில் கச்சையின்றி உள்ளது. காதுகளில் குண்டலங்கள் அணிந்து தோள்வளை, கைவளையுடன் அழகுடன் பத்ம பீடத்தில் காட்சிதருகிறாள்.

சூரியன்

கோயிலின் திருச்சுற்று மாளிகையில் கருவறையில் நேர் எதிரே வலப்பக்கம் சூரியன் உருவம் அமைந்துள்ளது. அழகிய இரு கண்களும், இரு கரங்களையும் உடைய இவர் சமபாத ஸ்தானகத்தில் பத்ம பீடத்தில் நின்ற கோலத்தில் தலையில் கரண்ட மகுடம் அணிந்துள்ளார். இடது காதில் பத்ர குண்டலமும், வலது காதில் மகர குண்டலமும் அணிந்துள்ளார். தனது இரு கரங்களிலும் தாமரை மலரைப் பிடித்துள்ளார். இவரின் தலைக்குப் பின்னே ஒளிவட்டம் தோன்றுவது போன்றும், ஆபரணங்களில்

கண்டிகை, சரப்பளி, முத்துமாலை, இடைக்கட்டு, கைவளை, வாகுமாலை அனைத்தும் அணிந்து காணப்படுகிறார். ஆடைகளில் பீதாம்பரம் அணிந்துள்ளார். தனது அகன்ற மார்பில் பூணூல் தரித்துள்ளார். அழகிய தோற்றத்தில் இருக்கும் இச்சிற்பம் ஒரு முழு உருவச் சிற்பமாகும்.

செப்புத் திருமேனிகள்

வன்மீகநாதர் கோயில்

செப்புத் திருமேனிகள் பல்லவர் காலம் தொட்டு இருந்தாலும் சோழர் காலத்தில் மிகவும் சிறப்புற்று இருந்தது. வன்மீகநாதர் கோயிலில் இக்கோயிலுக்கு உரிய திருமேனிகளும் வேறுசில திருமேனிகளும் உள்ளன. இக்கோயிலில் திருமேனிகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்கோயிலில் 23 செப்புத் திருமேனிகள் உள்ளன. இதில் இரண்டு விநாயகரும் நின்ற கோலத்தில் மேலிரு கைகளில் பாசம், அங்குசமும் கீழிரு கைகளில் மோதகம் மற்றும் தந்தமும் வைத்து இருக்கின்றனர். கரண்ட மகுடத்துடன் இடம்புரியாக உள்ளனர்.

சுகாசனர்

சுக ஆசனத்தில் சடைமுடியுடன் மேலிரு கைகளில் மானும் மழுவும், கீழிரு கைகளில் அபய, வரத முத்திரையிலும் சுகாசனர் காணப்படுகிறார்.

முருகன், வள்ளி, தெய்வயானை

மூவரும் பத்ம பீடத்தில் நின்ற கோலத்தில் கரண்ட மகுடத்துடன் உள்ளனர். முருகன், மேலிரு கைகளில் சக்தியும் வஜ்ஜிரமும், கீழிரு கைகளில் அபயமும், வரதமும் காட்டியுள்ளார்.

வள்ளி தெய்வயானை லோல ஹஸ்தத்துடன் நீலோத்பலமலர் மற்றும் பத்மம் வைத்துள்ளனர்.

இவை தவிர சூலத்தேவர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சம்பந்தர், நந்திகேஸ்வரர், உமா சகிதர், கந்தன், பைரவர், நடராஜர், தேவியர், நந்தி வாகனம் அர்ச்சுனன், தர்மர், திரௌபதி போன்ற திருமேனிகள் உள்ளன.

கந்தசாமி கோவில்

இக்கோயிலிலும் அதிக அளவில் செப்புத் திருமேனிகள் காணப்படுகின்றன. வீரபாகு, கந்தசாமியார், முருகன்-வள்ளி-தேவசேனா, ஆறுமுகன்-வள்ளி, தேவசேனா, கைலாசநாதர், சிவானந்த வள்ளி, பிரம்மா, விஷ்ணு, தண்டபாணி, விநாயகர், முத்துகுமாரசாமி, ஸ்ரீ பலிநாயகர், தேவசேனா, கழுக்குன்றார், சண்டி அசராயர் ஆகிய இச்செப்புதிருமேனிகள் இக்கோயிலின் தர்மகர்த்தாவால் பாதுகாக்கப்படுகின்றன.

நவகிரகம்

கருவறையின் வலப்பக்கத்தில் சிறிய மேடையின் மீது நவகிரகங்கள் அமைந்துள்ளன. சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், பிரகஸ்பதி (வியாழன்), சுக்கிரன் (வெள்ளி), சனி ராகு, கேது எனும் ஒன்பதிமாரும் கிரகங்களிலே நவ நாயகர்கள் ஆவர். இவர்கள் ஒன்பது கிரகங்களின் தேவதைகளாக அவ்வவ் கிரகங்களிலே இருந்து மேரு மலையை மையமாக வைத்து விண்வெளியில் சுழன்று வருகிறார்கள். இவர்களில் சூரியன் முதலிய எழுவர் வலமாகவும், இராகு கேது எனும் இருவர் இடமாகவும் சுழன்று வருகின்றனர். இவர்கள் தம்மை வழிபடுபவர்களுக்கு நற்பலனை அளிக்கின்றனர்.

"ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பி ரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அலை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே"

எனத் திருஞான சம்பந்தர் கூறியுள்ளார்.

புதன் (வடக்கு முகம்)	சுக்கிரன் (கிழக்கு முகம்)	சந்திரன் (மேற்கு முகம்)
வியாழன் (வடக்கு முகம்)	சூரியன் (கிழக்கு முகம்)	செவ்வாய் (தெற்கு முகம்)
கேது (தெற்கு முகம்)	சனி (மேற்கு முகம்)	இராகு (தெற்கு முகம்)

சிவாலயங்களில் நவகிரக பிரதிஷ்டை இரண்டு விதமாக அமைந்திருக்கிறது. அவை ஆகம பிரதிஷ்டை, வைதீகப் பிரதிஷ்டை என்று கூறப்படும். ஆலயங்களில் கருவறையின் வடகிழக்கு பாகத்தில்தான் பிரதிஷ்டை செய்யப்படும். மேலே கூறப்பட்டுள்ள நவகிரகச் சிற்பங்கள் குறைந்தது 10 அங்குலம் உயரம் கொண்டதாக அமைந்துள்ளன.

6. செய்யூர் - கோவில்கள்

கைலாசநாதர் கோயில் வரலாறு

இவ்வூரின் காலத்தால் முற்பட்ட கோயிலாகக் கருதப்பட்டாலும் முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டே காலத்தால் முந்தியது ஆகும். இக்கோயிலில் உள்ள கல்வெட்டை 1902-இல் படியெடுத்து உள்ளார். குலோத்துங்கனைத் தொடர்ந்து விக்ரம சோழன், இரண்டாம் ராஜராஜன், இரண்டாம் ராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோர் காலத்தில் கோயிலுக்கு நிவந்தங்கள் அளிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டில் **“கயிலாயமுடைய ராஜேந்திர சோளீஸ்வர முடையார்”** எனக் குறிப்பிடப்படுகிறது. 1902-இல் நல்ல நிலையில் இருந்த கோயிலில் இன்று கருவறையும் அர்த்தமண்டபமும் மிகவும் சேதமடைந்து விட்டது. மகா மண்டபம் மட்டும் ஓரளவு நல்ல நிலையில் உள்ளது. கிட்டத்தட்ட 100 ஆண்டுகளில் கோயிலின் நிலை தலைகீழாக மாறிவிட்டது.

கைலாசநாதர் கோயிலின் அமைப்பு

இக்கோயில் ஊரின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது. சிதிலமடைந்த கருவறை மற்றும் அர்த்தமண்டபப் பகுதியானது புதுப்பிக்கும் நோக்கில் உடைந்த கற்களுக்கு எண்கள் இடப்பட்டுள்ளன. ஆனால் அது நடைபெறவில்லை. தற்போது மகாமண்டபத்தின் மையப்பகுதியில் லிங்கமும், வலப்பகுதியில் தேவியின் சிலையும் உள்ளது. தேவியின் கையில் மேலிரு

கைகளில் நீலோத்பலமலர், தாமரையும், கீழிரு கைகளில் அபயமும், வரதமும் காணப்படுகிறது. மகா மண்டபத்தில் உள்ள நான்கு அரைத்தூண்களும் நான்கு தூண்களும் காணப்படுகின்றன. அவை 8 மற்றும் 4 பட்டைகளாக அலங்கரிக்கப்பட்டுள்ளன. கோயிலுக்கு மகா மண்டபத்தில் தென்புறமாக வாயிலாக உள்ளது. மண்டபத்தின் கிழக்கே அழகிய வேலைப்பாடுடன் கூடிய நந்தி ஒன்று உள்ளது. மேலும் கோயிலுக்கு ஒரு சுற்று சுவர் மற்றும் கோபுரம் இருந்தமைக்கான தடயம் காணப்படுகிறது. மண்டப சுவர் பகுதி மிக அழகான வேலைப்பாடுடன் பித்தி பகுதி அலங்கரிக்கப்பட்டுள்ளது. கூரையின் மேல் பகுதியில் கல்லால் ஆன நந்திகள் காணப்படுகின்றன.

பிற கோயில்கள்

கந்தசுவாமியார் கோயில்

காலத்தால் முற்றபட்ட கோயிலாகக் கருதப்பட்டாலும் இது 20-ஆம் நூற்றாண்டில் அதிக அளவில் சீர் செய்யப்பட்டுள்ளது. இன்று இக்கோயிலே மிகவும் சிறப்புற்று விளங்குகிறது. இக்கோயிலின் கருவறை கிழக்கு நோக்கி இருப்பினும் கோபுரம் தெற்கு நோக்கியுள்ளது. இதன் மதில் சுவரானது தெற்கு வடக்கில் 59 கஜமும் கிழக்கு மேற்கில் 57 கஜமும் கொண்டுள்ளது. கோபுரத்தின் மேல் கட்டுமானம் இல்லை. ஆனால் சுவாமி கருவறைக்கும் அம்மன் கருவறைக்கும் சிறிய விமானம் உண்டு. அம்மன் கருவறை சுவாமி கருவறைக்கு எதிர் வலப்புறமாக அமைந்திருப்பதால் தனித்தனி உட்பிரகாரமும், ஒரே ஒரு வெளிப் பிரகாரமும் உள்ளது. அம்மன் கருவறை இரண்டாக பிரிக்கப்பட்டு

வள்ளிக்கும், தெய்வயானைக்கும் தனித்தனியாக அமைந்துள்ளது. சுவாமி கருவறைக்கு தென்புற வாயிலே பழமையானது. ஆனால் 1943-இல் கிழக்குப்புற வாயில் அமைக்கப்பட்டுள்ளது. வெளிப் பிரகாரத்தில் நவகிரகம், கணபதி சந்நதிகள் உள்ளன. இக்கோயிலில் வீரபாகு தேவர்க்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கோயிலின் மதிலில் பூதங்கள் இருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

பெருமாள் கோயில்

கரியமாணிக்கப் பெருமாள் என்ற கோயில், கந்தசாமி கோயிலுக்கு நேர் மேற்கே உள்ளது. இது வடதெற்காக 33 கஜமும், கிழக்கு மேற்கில் 54 கஜமும் கொண்டது. கருவறைக்கு வடக்கே ஆண்டாள் சன்னதியும், பெருந்தேவியம்மன் என்ற தாயார் சன்னதியும் உள்ளது. இதற்கு நேர் எதிரே ஆஞ்சநேயர் கோயில் காணப்படுகிறது.

விநாயகர் கோயில் பெருமாள் கோயிலுக்கு தென்புறத்தே உள்ளது. இப்போது வரசித்தி விநாயகர் என்ற பெயரில் இவரை அழைக்கின்றனர். கன்னியம்மன் என்ற கோயில் ஊருக்கு மேற்கு புறமாக உள்ளது. பிற்கால சுதை கட்டுமானமாக இருப்பினும் மிக நேர்த்தியாக உள்ளது. கருவறையில் அம்மன் சிலையும் தென்புறத்தே சுதையால் ஆன கன்னிமார் சிலைகளும் சிதிலமடைந்துள்ளன. கிராம தேவதைகளாக துரோபதை அம்மன், பிடாரி அம்மன், கெங்கை அம்மன், தீப்பாஞ்ச அம்மன் என்ற சிறு கோயில்களும் உள்ளன.

❖❖❖

7. கல்வெட்டு செய்திகள்

ஓர் ஊரின் வரலாறு அறிய வேண்டுமானால் இரண்டாம் நிலை ஆதாரம் மட்டும் அல்லாமல் முதல் நிலை ஆதாரமான தொல் பொருள், சிற்பம், கட்டடம் மற்றும் கல்வெட்டு போன்றவை அறியப்பட வேண்டும். தமிழகத்தில் கல்லெழுத்துக் கலை என்பது மிகவும் தொன்று தொட்டு விளங்கும் கலையாகும். அவ்வகையில் செய்யூரில் கிடைத்துள்ள இரு கோயில்களின் கல்வெட்டைக் கொண்டு அவ்வூரின் அன்றைய பொருளாதாரம், நாட்டு பிரிவு, சமூக நிலை, நீட்டல், முகத்தல், நிறுத்தல் அளவை முறைகள் அரசியல் நிலை போன்ற செய்திகளை அறியமுடிகிறது. கல்வெட்டுகள் பெரும்பாலும் மங்கலவாசகம், சாசனம் எழுதப்பட்டக் காலம், சாசனச் செய்தி, கையெழுத்துக்கள் மற்றும் ஓம்படைக் கிளவி எனப் பிரிக்கப்படுகிறது.

மங்கல வாசகம்

1902-இல் வெளியான கல்வெட்டு ஆண்டறிக்கை வரிசை எண்.430 முதல் 454, A,B வரை மொத்தம் 27 கல்வெட்டுகளில் 24 கல்வெட்டில் **'ஸ்வஸ்தி ஸ்ரீ'** எனத் தொடங்குகிறது.

மெய்கீர்த்தி

"வீரமே துணையாவும் . . . ." எனத் தொடங்கும் கல்வெட்டு வீரராஜேந்திர சோழனது ஆகும். (A.R.E. No. 430).

"பூமேவுவளர் திருப்பொன்மாது . . . . ." எனத் தொடங்கும் கல்வெட்டு இரண்டாம் குலோத்துங்கனுடையது ஆகும். (A.R.E. No. 431).

"பூமன்னு பதுமம் பூத்த . . . ." எனத் தொடங்கும் கல்வெட்டு இரண்டாம் குலோத்துங்கனுடையது ஆகும். (A.R.E. No. 444).

"மதுரையும் பாண்டியன் . . . ." எனத் தொடங்கும் கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்கனுடையது ஆகும். (A.R.E. No. 449).

கல்வெட்டு அரசர்கள்

	கி.பி.		கி.பி.
வீரராஜேந்திரன்	1063	-	1070
முதல் குலோத்துங்கன்	1070	-	1120
விக்ரமசோழன்	1118	-	1135
இரண்டாம் குலோத்துங்கன்	1133	-	1150
இரண்டாம் ராஜராஜன்	1146	-	1163
இராஜாதிராஜன்	1163	-	1178
மூன்றாம் குலோத்துங்கன்	1178	-	1218

கல்வெட்டு கூறும் நாட்டு பிரிவு

ஜெயங்கொண்ட சோழ மண்டலம்

செம்பூர் கோட்டம்

புறையூர் நாடு

செய்யூரான ஜெயங்கொண்ட சோழ நல்லூர் மற்றும் செய்யூரான வீரராஜேந்திர நல்லூர் எனக் குறிப்பிடுகிறது. மேலும் சோழ மண்டலத்து பாண்டிய குலோசனி வளநாட்டு ஆற்காட்டுக் கூற்றத்து, நெய்தல் வாயில் என மற்றொரு நாட்டு பிரிவை குறிக்கிறது, (A.R.E. No. 446.) இவ்விரு கல்வெட்டை நோக்கும் போது சோழ நாட்டிலும், தொண்டை நாட்டிலும் ஒரே ஆட்சி காலத்தில் வெவ்வேறு நாட்டு பிரிவுகள் உள்ளதைக் காணமுடிகிறது.

கல்வெட்டில் ஆள்பெயர்கள்

தானத்தார்கள்

முன்னரே குறிப்பிட்டபடி இவ்வூரில் சோழ குடியை சேர்ந்தவர்கள் இருந்ததால் இவ்விரு கோயில்களிலும் கொடுக்கப்பட்ட கொடைகள் பெரும்பாலும் அவர்களால் கொடுக்கப்பட்டவை. எனவே பெயரிலும் ஒரு சில சோழ மன்னர்களின் பெயர்களை இணைத்துக் கொண்டனர். மேலும் ஒரு சில தனிப்பட்ட நபர்களும், வேறு நாட்டவரும், பெண்களும் தானம் செய்துள்ளனர்.

1. சேனாதிபதிராயன் மதுராந்தகனான ராஜராஜ நயபாலனென் (A.R.E. No. 430.)

2. ..... செரி அரயனான் ராஜ.... திரையன் (A.R.E. No. 431.)
3. சோழதுராந்தகதேவன் (A.R.E. No. 431.)
4. திரையன் வளவதரையன் சிவகதிகங்கதேவன் குங்காவன் திண்டி. (A.R.E. No. 432, 433.)
5. வெள்ளாட்டி கோதை மகள் உய்ய வந்தாள் (A.R.E. No. 434.)
6. திண்டிக்கூத்தன் ஆன புற்றிடங்கொண்ட மாமுனி (A.R.E. No. 434.)
7. தாங்கி மாந்துறை நம்பி (A.R.E. No. 435.)
8. நெய்குப்பையுடைச்சி அருந்தவஞ்செய்தாள் (A.R.E. No. 436.)
9. நெய்தவாயிலுடையான் வேளான் தேவர் கண்டன் (A.R.E. No. 437.)
10. திரையன் மாதேவடிகள் கைக்கொண்டான் ராஜாதிராஜ வளவதரையன் (A.R.E. No. 438.)
11. திரையன் ஒற்றிக்கொண்டான் திருச்சிற்றம்பல முடையான் ஆன செம்பியன் வளவதரையன் (A.R.E. No. 439.)
12. திரையன் மதுராந்தக தேவன் ஆன ராஜகெம்பீர வளவதரையன் (A.R.E. No. 440.)
13. கங்கைகொண்டான் ஆன கரிகாலச்சோழன் வீரையன் பிராமணி யொற்றி கொண்டாள் (A.R.E. No. 440.)

14. செம்பியவளவதரையன் (A.R.E. No. 440.)
15. திரையன் தேவர்கண்டன் தாங்குவானான உத்தம சோழ வளவதரையன் (A.R.E. No. 441, 443, 450, 452, 453, 454, 454A, 454B.)
16. ஆதிச்சதேவன் மகன் திலைலை நாயகன். (A.R.E. No. 442.)
17. நெய்தல் வாயிலுடையான் (A.R.E. No. 446.)
18. தாங்கி மாந்துறை நம்பி (A.R.E. No. 447.)
19. வெள்ளான் அரிந்தமன் திருநீலகண்டன் (A.R.E. No. 448.)
20. கம்பன் திண்டி (A.R.E. No. 433.)

காணியுடையார்

இவர்கள் பெரும்பாலும் அவ்வூரைச் சார்ந்தவர்கள் ஆவார். சிவபிராமணர், பட்டர்கள் போன்றோர் கோயில் சார்பாகப் பெற்ற தானங்களைப் பாதுகாத்தனர். மேலும் பெற்ற தானத்திற்கு எவ்விதத் தீங்கு நேராமலும் மிகவும் கவனத்துடன் செய்து வந்தனர்.

இங்கு கூறப்படும் சியாறு என்பது செய்யூராகவோ, செய்யாகவோ இருக்கலாம். மேலே குறிப்பிட்ட ஒரு சிலா் கல்வெட்டுகளில் சாட்சி கையொப்பமும் இட்டுள்ளனா். எனவே சிவபிராமணா்களுக்கு அதிக அளவில் முக்கியம் அளித்துள்ளதை அறியமுடிகிறது.

கல்வெட்டில் கூறப்படும் கொடைகள்

கல்வெட்டில் ஆடு, பசு, நிலம், காசு, உப்பளம், நெல், போன்றவை கொடையாக அளிக்கப்பட்டுள்ளன. இதன் விபரம் அட்டவணையில் உள்ளது.

உப்பளம்

கல்வெட்டில் உப்பளத்தைப் பற்றி நிறைய செய்திகள் கூறப்பட்டுள்ளன. உப்பளத்தின் பெயர், உப்பளத்தின் அளவு போன்றவையும் காணப்படுகின்றன. (A.R.E. No. 445.)

1. பெரும்பாடி அளம் (A.R.E. No. 439.)
2. தேவகள் சுந்தரப் பேரளம் (A.R.E. No. 439.)
3. ஒற்றி கொண்டான் அளம் (A.R.E. No. 440.)
4. வேணூரளம் (A.R.E. No. 445.)
5. வடமுட்டை காலளம் (A.R.E. No. 445.)
6. தென்முட்டை காலளம் (A.R.E. No. 445.)
7. கங்கை கொண்டான் காலளம் (A.R.E. No. 445.)
8. பெரிய அளம் (A.R.E. No. 445.)

இந்த உப்பளங்களில் வரும் வருமானத்தை புற்றிடங் கொண்ட மகாதேவர்க்கும், பள்ளியறை நாச்சியாருக்கும், இவ்வூரில் உள்ள பிற கோயில்களுக்கும் பகிர்ந்தளிப்பதாக உள்ளது. மேலும் உப்பள வருமானத்தை திருப்பள்ளி எழுச்சிக்கும், பூசைகளுக்கும் பயன்படுத்துவதாகக் கூறுகிறது.

கல்வெட்டில் கூறும் பிற தெய்வங்கள்

பள்ளியறை நாச்சியார் (A.R.E. No. 445, 431, 214.)

பிள்ளையார் (A.R.E. No. 441.)

தக்ஷிணாமூர்த்தி (A.R.E. No. 441.)

குலோத்துங்க சோழீஸ்வரமுடைய மகாதேவர் (A.R.E. No. 445.)

அருமொழிஸ்வரமுடைய மகாதேவர் (A.R.E. No. 445.)

மதுராந்தக விண்ணகராழ்வார் (A.R.E. No. 445.)

கல்வெட்டு கூறும் உறவு முறை

செய்யூர் கல்வெட்டில் தம்பி, மகன், மகள், மனைவி போன்ற உறவு முறை பெயர்கள் காணப்படுகின்றன.

கல்வெட்டில் சீதனம் பற்றிய செய்தி

கல்வெட்டில் 'ஸ்த்ரீதனம்' என்று குறிப்பிடப்படுகிறது. இச்சொல்லுக்கு பெண்ணின் செல்வம் என்று பொருள் என்பதை பி.வி. கானே என்பவர் எழுதிய நூலில் சீதனம் பற்றி பல தகவல்களைத் தந்துள்ளார். கி.பி. 9 முதல் 14-ஆம் நூற்றாண்டு வரை ஏறத்தாழ 25 கல்வெட்டுகள் ஸ்த்ரீதனம் பற்றிக் கூறுகிறது. அதில் செய்யூர் கல்வெட்டில் இவ்வூரார் 10 வேலி நிலம் ஸ்த்ரீதனமாக பள்ளியறை நாச்சியாருக்கு கொடுத்துள்ளதை தெரிவிக்கிறது.

கல்வெட்டு கூறும் அளவு முறை

நீட்டல் அளவை : தடி, கோல்

முகத்தல் அளவை : நாழி

கல்வெட்டு கூறும் நிலம் மற்றும் நாணயப் பெயர்கள்

வேலி, மா, காணி, குழி, படாகம், செறு, கிணறு, கரம்பை, வாய்க்கால், அளம் போன்ற நிலப் பெயர்களும் காசு, பழங்காசு, புதுக்காசு, மஞ்சாடி போன்ற நாணயப் பெயர்களும் அதனைச் சார்ந்த பலிசை, போலி, பொலிஊட்டல் போன்ற வட்டியின் பெயர்களும் காணமுடிகிறது.

பூசைகளும் திருவிழாவும், கோயில் நிகழ்ச்சிகளும்

திருவாபரணத் திருப்பணி, திருப்பணி மாற்று, திருவிழாப்படி, திருப்பள்ளி எழுச்சி, திருஅர்த்தசாமம், பிள்ளையாரின் அமாவாசை உற்சவம், ஐப்பசி, பூரம், சதயநாள் விழா, திருமஞ்சனம், சிறுகாலை சந்தி, திருமாலை சாத்துதல், பரணி, பூசம், கார்த்திகை, திருவாதிரை நாள் பூசை, புரட்டாசி முதல் மார்கழி வரை உலா வருதல் போன்ற நிகழ்ச்சிகளும், கோயில் பூசையும் பணிகளும் கல்வெட்டில் காணப்படுகிறது.

பூசைப்பொருட்கள்

சந்தி விளக்கு, நொந்தா விளக்கு, திருமஞ்சன குடம், போன்ற பொருள்கள் கல்வெட்டில் காணப்படுகின்றன.

வரிகள்

இவ்வூர் கல்வெட்டில் வரிகளின் பெயர்கள் காணப்பட வில்லை. இருப்பினும் வரி நீக்கி விட்ட நிலம் என கல்வெட்டில் உள்ளன. (A.R.E. No. 430.)

கல்வெட்டில் தமிழ் எண்கள்

க, உ, உஇ, ஙவங ய, யஉ, ய, உய யசா, உள போன்ற தமிழ் எண்கள் காணப்படுகின்றன.

முற்றுப்பெறாதக் கல்வெட்டுகள்

ஐந்து கல்வெட்டுகள் முற்றுப்பெறாமலும் இரண்டு கல்வெட்டுகள் தொடக்கம் இல்லாமலும் உள்ளன. A.R.E. No. 433, 434, 440, 445, 451.

கைலாசநாதர் கோயிலின் இரண்டு தொடக்கம் இல்லாத கல்வெட்டுகளை மற்ற கல்வெட்டுகளில் காணப்படும் பெயர்கள் வருவதனால் அதே காலத்தியது எனலாம். மேலும் கோயில் சேதம் அடைந்த காரணத்தினாலேயே அதன் தொடக்கம் கிடைக்காமல் போயிருக்கலாம்.

ஓம்படைக்கிளவி

அனைத்துக் கல்வெட்டுகளிலும், ஓம்படைக்கிளவிப் பகுதியில் பன்மாகேஸ்வர ரக்ஷை என்ற வாசகமே காணப்படுகிறது.

8. முடிவுரை

இவ்வூரில் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு நோக்கும் போது, நிலதானம் பற்றி கூறும் போது உப்பளத்தின் முக்கியத்துவம், மற்றும் வாய்க்கால், கிணறு, போன்ற நீர்ப்பாசனத்தின் முறையையும் காணமுடிகிறது. கல்வெட்டுகளில் காணப்படும் தானங்களில் பசு, ஆடு போன்றவை அதிக அளவில் சந்தி விளக்குகளுக்காக கொடுக்கப்பட்டவையேயாகும். இருப்பினும் சீதனம் பற்றிய கல்வெட்டு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அன்றைய சூழ்நிலையில் மாதந்தோறும் திருவிழாவும், தினமும் பூசையும் நடைபெற்றதாக ஒரு சில கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆனால் இன்று அதன் நிலை தலைகீழாக உள்ளது. இப்போது பிரதோஷத்தன்று மட்டும் வன்மீகநாதர் கோயில் நல்ல முறையில் பூசை நடைபெறுகிறது. கைலாசநாதர் கோயிலின் நிலை மிகப் பரிதாபமாக உள்ளது. ஆனால் இவ்வூரில் இருக்கும் கந்தசாமியார் கோயிலில் ஆண்டு தோறும் சிறப்பு பூசையும், ஐப்பசி மாதம் ஷஷ்டி திருவிழாவும் கொண்டாடப்பட்டுவருகிறது.

இவ்வூரில் அண்மைக்காலம் வரை சர்வ வாத்திய குழுவினர் இருந்ததை அறியமுடிகிறது. திரு. அ. இராசேந்திரன் அவர்களின் வீட்டருகில் "பதிவிளக்கு" எனும் பூசை விளக்கு கண்டுபிடிக்கப்பட்டது. இது சுமார் 200 ஆண்டுகளக்கு முற்பட்டது எனலாம்.

சுமார் 5000 ஆண்டுகள் பழமை வாய்ந்த இவ்வூர் கோயில்கள் பிற்கால சோழர் காலத்தில் மிகவும் சிறப்புற்று இருந்து, பின்னர் ஜமீன் காலத்தில் பராமரிக்கப்பட்டு, இன்றும் ஒரு நல்ல நிலையில் கோயில் பரம்பரை தர்மகர்த்தாவால் இங்குள்ள கோயில்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

9. துணைநூல் பட்டியல்

1. கோயிற் களஞ்சியம் அறிமுகம், கோ.மு. முத்துசாமி பிள்ளை இ.ஆ.ப. (ஓய்வு) தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
2. சிவ வடிவங்கள், சைவத் தமிழ்மணி வித்துவான் மா.சிவ. குருநாதப்பிள்ளை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 005.
3. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், மயிலை. சீனி வெங்கடசாமி, மணிவாசகன் பதிப்பகம் 55, லிங்கி தெரு, சென்னை-600001.
4. தென்னிந்தியக் கோயில்கள், கே. ஆர். சீனிவாசன், நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா
5. சேயூர்த் தல வரலாறு செய்யூர், முத்தையா முதலியார், பி.ஏ. காக்ஸ்டன் அச்சுயந்திர சாலை, சென்னை.
6. நலம் தரும் தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள், கே. பாலசுப்பிரமணியம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 154, டி.டி.கே. சாலை, சென்னை-600018.
7. Jaina Iconograpy In Tamil Nadu, Dr. A. Ekambaranathan, SHRI BHARATVARSHIYA DIGAMBER JAIN (Teerth SANRAKSHINI) Mahasabha, LVC Lucknow.
8. திருமணமலர், சுப்பையா-மங்கையர்க்கரசி திருமணம், ஆத்தங்குடி, 10-11-2002
9. சாசன மாலை, பதிப்பாசிரியக் குழுவினரால் வெளியிடப் பெற்றது. எஸ். ராஜம், 5, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1.
10. தொல்லியல் அகழ்வாய்வு நெறிமுறைகள், Dr. எ. ஏகாம்பரநாதன், Dr. அரங்க பொன்னுசாமி, ரோகிணி பதிப்பகம், சென்னை-14.
11. Jaina Inscription in Tamilnadu (A Topographical List) Dr. R. Ekambaranathan, Dr. C.K. Sivaprakasam, Research Foundation of Jainology, Madras – 79.
12. காஞ்சிபுர மாவட்ட வரலாறு, திருஞானசம்பந்தர்
13. சிவாலய திருமேனிகள், திருவாவடுதுறை ஆதீனம்
14. கல்வெட்டு ஆண்டறிக்கை 1902, வரிசை எண். 430 முதல் 454 A, B வரை

No. 16.

(*A.R. No.* 430 *of* 1902).

On the north wall of the central shrine in the Valmikanatha temple at Seyyur, Madurantakam taluk, Chingleput district.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] விரமெ துணையாகவுந் தியாகமெ யணியாகவுஞ் செங்கொ லொச்சி கூருங்கலி
கடிஞு கூடல்சங்க[ம*]த்து ஹா(ர)ஹவமல்லனை யஞ்சுவித்து விக்கல[னை யுஞ் சிங்க-
ண]னையும் உடைபுறங் கண்டு மற்றவன் ஸ்ரீதெவியொடும் வஹுவாஹநங்
கைக்(க்)கொண்டு இரண்டாம்விசையிலுங் குறித்த களத்து ஹாஹவமல்லனை யஞ்சு-
வித்து[த் தந்] முன்னவர் விரதமுடித்து வெங்கைநாடு மீட்டருளி விஜெயா-
[பிஷெகம் பண்ணி] விரஸிம்ஹாஸநத்து உலகமுழுதுடையாளொடும் வீற்றிருந-
[ருளிய] கொவிராஜகெஸரிவந்மரா-

2 ன உடையார் ஸ்ரீவிராஜெந்த்ரதெவர்கு யாண்டு அஞ்சாவது ஜயங்கொண்டசொழ-
மண்டலத்துச் செம்பூர்க்கொட்டத்துப் புறையூர்நாட்டுச் செய்யூரான ஜயங்கொண்ட-
சொழநல்லூர்ப் புற்றிடங்கொண்டருளின ஸ்ரீமஹாதெவர்க்கு ஸெநாபதிமாராயன்
மதுராந்தகனான ராஜராஜநயபாலனென் இத்தெவர்கு வ-ஸ்வ-ஷ்ண வஸ ஒன்றினுக்குத்
திருவமுர்தரி(ய்)சி நாநாழிகும் கறியமுர்துக்கும் நெய்யமுர்துகும் அடைக்காயமுர்துக்கும்
ஸந்திவிளகு ஆறுக்கும் ஆக வஸ ஒன்றினுக்கு நெல்லுப் பதக்கு முன்னாழிகு
இந்நாட்டு என் காணி செய்யூரான விராஜெந்த்ரநல்லூர்

3 நிர்நிலத்து இறைமிலியாக விட்ட நிலத்துக்கு கிழ்பாற்கெல்லை திரையசெகரன் செறு-
வுக்கும் பல்விருப்பான்காம்பைகு[ம*] மெற்கும் வடபாற்கெல்லை வளவதரயன்செறு-
வுகு மெற்கும் தென்பாற்கெல்லை பல்விருப்பான்காம்பைய்க்கும் தில்லம்பள்ளித்துக்குப்
பாயும் வாய்க்காலுக்கு வடக்கு தடி இரண்டுக்கு வடக்கும் மெல்பாற்கெல்லை [கி]கரி[வி]-
சொழவதியின் கிழின் தடி முன்றுக்குக் கிழக்கும் இன்னாற்பாலெல்லைக் குள்ளு[ம*]
நடுவு கிணறு [அ*]கப்பட சடையன்செறுவு தடி இரண்டிகால் பதி-

4 னெஞ்சாண்கொலால்க் குழி எழுநூற் றறுபத்திரண்டெ மாகாணியும் இத்தெவர்க்கு
இறைமிலியாக இறைமிழிச்சி கல் வெட்டுவித்துக் குடுத்தென் ஸெநாபதி மாராயன் மது-
ராந்தகனான ராஜராஜநயபாலனென்[|*] இத்தன்மம் இறக்குவா[2]

No. 17.

(*A.R. No.* 431 *of* 1902).

On the same wall.

1 உ ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] பூமெ[வு*] வளர் திருப்பொன்மாது புணர நாமெவு கலைமகள் நலம்
பெரிது சிறப்ப விசையமா . . . . திருப்ப இசை[யிந்]செ[ல்-
வி][யு*] மெண்டிசை விளங்க நிருபர் வந்திரைஞ்ச நிணிலமடந்தையை திருமண-

2 ம் புணர்ந்துச் சிர்வளர் தரும மணிமுடி கவித்தென அணிமுடி சூடி மல்ல(வ) ஞாலத்துப்
பல்லுயிரிக் கெல்லா [மெல்லையி] . . . . வெண்குடைநிழற் செங்கொ
லொச்சி வாழிஊழி யாழிநடப்பச் செம்பொந் விரஸிம்ஹாஸநத்துப் பு-

3 வனிமுழுதுடையாளொடும் விற்றிருந்தருளிய கொவிராஜகெஸரிபன்மராக திரிபுவநச்-
சக்[க*]ரவர்த்திகள் ஸ்ரீகுலொத்துங்கசொழதெவர்க்கு [யாண்டு] . . . ஜயங்கொண்-
டசொழமண்டலத்து செம்பூர்கொட்டத்து [புறையூ]ர்நாட்டுச் செய்யூரான

4 ஜயங்கொண்டசொழநல்லூர்ப் புற்றிடங்கொண்டருளிய மஹாதெவர்க்கு இவ்-
. . . . . . செரி[அரய]னை ராஜ . . . . . . தரையன் சந்திராதித்தவரை
செல்வதாக வைத்த திருநந்தாவிளக்கு

5 ஒன்றுக்கு விட்ட பசு முப்பதும் இக்கொயிலி விநெவர்ப் பள்ளியரைநாச்சியாற்குப்
பவிசை[யாற் திருவாபரண]ந் திருப்பணிகளுக் குடலாய்ச் செல்வதாக முதல் குடு-
த்த காசு இருபதும் இக்கொயில்ச் சிவ-

6 வா[1]ஹ்மணந் திண்டி[க்]கூத்தனுஞ் சூரியன் தாங்[கு]வானும் இப்பசு முப்பதும் இக்காசு
இருபதுங் கைக்கொண்டு சந்திராதித்தவரை இப்பசுவாற் திருநந்தாவிளக்கு ஒன்-
றும் செலுத்தி [இக்காசு] முத லழியாதெ வெத்து இக்காசி லாண்-

---

[1] The letter ம் is written below the line.

[2] The record is incomplete; but only a small portion is wanting at the end.

7 தொறும் பெற்ற பவிசையாலுள்ளது இக்கொயிலில் ஸ்ரீமாஹெஸ்வரக்கண்காணி . . .
. . . . திருப்பணி . . . . . ற்கு செலுத்தக்கடவொமாகவும் [|*]
இந்தப் பள்ளியறைநாச்சியாற்கு

8 மெற்படியாக் வெத்த திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு இவர்தந்த காசு [முப்பது] இக்காசு
. . . . பலிசெயால் இத்திருநந்தாவிளக்கு ஒன்றும் சந்திராதித்த-

9 . . . . இவந் தம்பி சொழமதுராந்தகதெவந் இத்தெவற்கு வைத்த
ஸந்திவிளக்கு ஒன்றுக்கு விட்ட ஆடு பன்னிரண்டும் நாங்கள் கைக்கொண்டு ஸந்தி-
விளக் கொன்று

10 . . சந்திராதித்தவரை செலுத்தக்கடவொமாகவும் [*|] மெற்படியாக் இந்தப் பள்ளி
யறைநாச்சியாற்குத் திருப்படிமாற்றுக் குடலாக இறை யிழித்தி விட்ட நிலம் இவ்வூரில்
அமுதவல்லிவதிசெறு-

11 விற் தெற்கடையக் குழி நூற்றிருபது இக்குழி [|*] நூற்றிருபதுங் கைக்கொண்டு . . .
. . . ள்ளது இக்காச்சியாற்குத் திருப்பணிமாற்று செலுத்தக்கடவொமாகவும் [|*]
இப்பசு முப்பதுங் காசு ஐம்பதும் இந்நிலமும் ஆடு

12 பன்னிரண்டும் கைக்கொண்டு கல் வெட்டுவித்தொம் இக்கொயிலிற் சிவ[ப்ராஹ்மணந்] திண்-
டிகூத்தனை புற்றிடங்கொண்டமஹாதெவபட்டனும் சூரியந் தாங்குவாநபட்டனும்
இவ்விருவொம் [|*] இது பன்மாஹெஸ்வர ரக்ஷை ||—

No. 18.

(*A.R. No.* 432 *of* 1902).

ON THE WEST WALL OF THE SAME SHRINE.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] விக்கிரமசொழதெவ[ர்*]க்கு யாண்டு ௬ செம்பூர்க்-
2 கொட்டத்துப் புறையூர்நாட்டுச் செய்யூரான ஜயங்கொண்-
3 டசொழநல்லூர்ப் புற்றிடங்கொண்டருளின மஹாதெவற்கு மெ-
4 மற்படி திரையந் வளவதரையந் சிவகதிகங்கத்தெவ[ற்]குக் க[ா]-

5 [வ]ந் திண்டியும் இத்தெவற்கு விட்ட திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு [விட்ட நிலம் திரு-
வெக]-
6 ம்பினில் மெல்கூறு பா[ட]கம் ஒன்றும் உறப்பொந்த[ா]ன்செறுப் பாடக(மு)ம் [அரையும்
ஆகப்பாட]¹-
7 கம் ஒன்றரையுங் கைக்கொண்டு இத்திருநந்தாவிளக்கு ஒன்றும் சந்திராதி[த்தவரை செ]-
8 லுத்தக்கடவொம் இக்கொயில் காணிஉடைய ஶிவப்ராஃ-
9 ஹ்மணக் கூத்தபட்டநும் நாயகநும் இவ்விருவொம் [।*]
10 ஶ்ரீமாஹேஶ்வர ரக்ஷை [॥*]

No. 19.

(*A.R. No.* 433 *of* 1902).

ON THE SAME WALL.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ[॥*] விக்கிரமசொழதெவற்கு யாண்டு ௩ செ-
2 ய்யூரான ஜ[ய*]ங்[கொண்ட*]சொழநல்லூர்ப் புற்றிடங்கொண்-
3 டமஹாதெவற்கு மெற்படியூரி லிருக்கும் வளவதரையன்
4 சிவகதிகங்(க்)கதெவன் விட்ட ²ஸத்திவிளக்கு ஒன்று [।*] ஒன்-
5 றுக்கும் விட்ட நிலம் திருத்து சிவகதிகுண்டில் பா[ட*]கம் அரை-
6 யும் கம்பன் திண்டி விட்ட ஸந் ³

No. 20.

(*A.R. No.* 434 *of* 1902).

ON THE SOUTH WALL OF THE SAME SHRINE.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [॥*] விக்கிரமசொழதெவற்கு யாண்டு [௩]-
2 வது ஜெயங்கொண்டசொழமண்டலத்து செம்பூர்க்கொ-
3 ட்டத்து செய்யூர்ப் புற்றிடங்கொண்டருளின மஹா[தெ]-
4 [வ]ர்க்கு இவ்வூர் வெள்ளாட்டி கொதை மகள் உய்யவந்தா-
5 ள் இத்தெவர்க்கு வைத்த ஸந்திவிளக்கு ஒந்றுக்கு விட்ட ஆடு
6 பன்னிரண்டும் இ[வ்*]வூர்த் திரையன் தாங்கி மாந்துறைநம்பி

¹ One of the pieces containing the words in brackets is lost.

² Read ஸந்தி.

³ The record is incomplete.

7 இத்தெவர்க்கு வைத்த ஸந்திவிளக்கு ஒன்றுக்கு விட்ட ஆடு [ப]-
8 ன்னிரண்டும் இக்கொயில் சிவப்ரா[ஹ்ம*]ணன் நாட்டுப்பெருமானான புற்-
9 [றிட]ங்கொண்டமாமுனி இத்தெவர்க்கு வைத்த ஸந்திவிளக்கு ஆறு[க்]-
10 [கு விட்ட] ஆடு எழுபத்திரண்டும் ஆக ஆடு தொண்ணூற்று-
11 றும் இக்கொயில் காணிஉடைய சிவப்ராஹ்மணர் திண்டி கூத்த-
12 னை புற்றிடங்கொண்டமாமுனியும் சூரியன் தாங்குவான்பட்ட-
13 நும் ¹

No. 21.

(*A.R. No.* 435 *of* 1902).

ON THE SAME WALL.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] சிரிகுலொத்துங்கசொழதெவ[ர்*]க்கு யாண்டு நா[ற்*]பத்தெழாவது
2 ஜயங்கொண்டசொழமண்டலத்து செய்யூருடையான் தாங்-
3 கிமாத்துறைநம்பியென் இவ்வூர் புற்றிடங்கொண்ட மஹாதெவ-
4 ற்கு இக்கொயில் சிவப்ராஹ்[ம*](ா)ணாந் கூத்த[பட்*]டநும் [க]ங்காதிரபட்ட-
5 நும் பந்மாயெசுவரபட்டநும் இம்முவொ[ம்*] [அ]ர்(ெ)[யழ] கைக்-
6 கொண்டு சந்ராதி[த்*]தவரை செலு[த்*]தக்கடவொம் இம்மு-
7 வொமு[ம்*] [।*] பந்மாஹெஸ்வர ரக்ஷை||—

No. 22.

(*A.R. No.* 436 *of* 1902).

ON THE SAME WALL.

1 [ஸ்வ]ஸ்தி ஸ்ரீ [||*] ராஜராஜதெவற்கு யாண்டு ச புற்றிடங்கொண்டார்-
2 க்கு நெல்—பையுடைச்சி அருந்தவஞ்செய்தாள்
3 வைத்த வ க விளக்கு க ஒன்றுக்கும் விட்ட ஆடு ப-
4 ன்னிரண்டு கைக்கொண்டு சந்த்[ர*]தித்தவரை செலுத்-

5 தக்கடவென் இக்கொயில் ஶிவப்ராமண[ன்*] தா[ங்கி]நான்
6 வட்ட(ன்)னென் இது பன்மாஹெஸ்வர ரக்ஷை ||—

No. 23.

(*A.R. No.* 437 *of* 1902).

ON THE SAME WALL.

1 ஸ்[வஸ்தி] ஸ்ரீ [||*] குலொத்துங்கசொழதெவர்க்கு யாண்டு
2 சயகூ-ஆவது ஜயங்கொண்டசொழமண்-
3 டலத்து செய்யூர்ப் புற்றிடங்கொண்டரு-
4 ளின மஹாதெவற்கு இவ்வூர் வெள்ளாள[ந்*] னெய்த-
5 வாயிலுடையான் வெளா[ன்] தெவ[ர்]கண்டன் இதெவர்க்கு
6 வைத்த ஸந்திரா[தித்த]வரை ஸந்திவிள[க்கு] ஒன்றுக்கும் காசு ஒந்-
7 ற மூந்[று]மாவும் இக்கொயில் காணியுடைய சிவப்ராஹ்மண[ந்]
8 கூத்தபட்டனும் கங்காதிரபட்டனும் பன்மா[ஹெ*]ஸ்வரபட்டனும்
9 இம்முவொம் செ[லு]த்தக்கடவொம் [।*] பன்மாயெஸ்வர ர[க்ஷை][||*]

No. 24.

(*A.R. No* 438 *of* 1902).

ON THE SOUTH WALL OF THE MANDAPA IN FRONT OF THE SAME SHRINE.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] விக்கிரமசோழதேவர்க்கு யா[ண்]டு அ-வ[து] செம்பூர்க்கோட்டத்துப் புறை-யூர்நாட்டு செய்யூரான செயங்கொ-
2 ண்டசோழநல்லூர்த் திரையன் மாதேவடிகள் கைக்கொண்டா(ன்ன)ன இராஜா[தி-ராஜ]வளவத[ை]ரயன் இவ்வூர்ப் புற்றிடங்கொ-
3 ண்டமஹாதே[வர்*]க்கு விட்ட திருநந்தாவிளக்கு க இவ்வொன்றுக்கும் விட்ட ஆடு தொண்ணூறுங் கைக்கொண்டு சந்திராதித்தவ-
4 ரை செலுத்தக்கடவோம் [||*]

---

¹ The record is left unfinished.

No. 25.

(*A.R. No.* 439 *of* 1902).

On the same wall.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] திரிபுவனச்சக்ரவர்த்திகள் ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு கூ-ஆவது செய்-யூரான ஜயங்கொண்டசோ[ழ]-
2 நல்லூர்த் திரையந் ஓற்றிகொண்டான் திருச்சிற்றம்பலமுடையானான செம்பியன் வளவ-தரையனென் பெரும்பாடி[அ]-
3 ளத்தில் தெ[ேவகள்சுந்தரப்]பொளத்துக்கு வடக்கில் அளத்தில் என்னொபாதி அளம் அரை[தெ]ய மாகாணியும் புற்றிடங்கொண்டருளிந மஹா-

4 ரதேவற்கு திருவிழாப்படிக்கும் திருகூத்ததாமத்துக்கும் திருப்பள்ளியெழுச்சிக்கும் ஆக விட்டேன் ௦||உ பந்மாஹேஸ்வர ரக்ஷை[||*]

No. 26.

(*A.R. No.* 440 *of* 1902).

On the same wall.

1 [திரிபுவ]னச்சக்ரவர்த்திகள் [ஸ்ரீ]ராஜாதிராஜதேவற்கு யாண்டு அ-ஆவது செய்யூரான ஜயங்கொண்டசோழநல்லூர்த் திரையன் மதுராந்தகதேவனான இராஜேந்திரவள-வதரை-
2 [யனும் கங்கை]கொண்டானான கரிகாலசோழன் திரையன் வராஹமணி யொற்றி-கொ[ண்]டா[னும்] செம்பியவளதரையனும் நாங்கள் பெரும்பாடியிற் ஓற்றிகொ-
3 ண்டா[ள்*] அளத்தில் திழைப்பத[ண]த்துக்கு [வை]க்கின்[ற அள]ம் அரைக்காவில் . . . . [புற்றிட]ங்கொண்டருளி[ய] மஹாதேவற்கு¹

No. 27.

(*A.R. No.* 441 *of* 1902).

On the north wall of the same mandapa.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] [ராஜ]ராஜதேவற்கு யாண்டு ரு-வது ஜயங்கொண்டசோழமண்டலத்து

2 [ராஜனும் கங்கை]கொண்டானான கரிகாலசொழன் விரையன் ஸ்ராஹ்மணி யொற்றி-
ரொ[கொண்]டா[ளும்] செம்பியவளதரையனும் நாங்கள் பெரும்பாடியிற் ஓற்றிகொ-

3 ண்டா[ள்*] அளத்தில் கிழைப்பத[ண]த்துக்கு [வை]க்கின்[ற அள]ம் அரைக்காலில்
. . . . [புற்றிட]ங்கொண்டருளி[ய] மஹாதெவற்கு[1]

No. 27.

(*A.R. No.* 441 *of* 1902).

ON THE NORTH WALL OF THE SAME MANDAPA.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] [ராஜ]ராஜதெவற்கு யாண்டு ரு-வது ஜயங்கொண்டசொழமண்டலத்து
செய்யூரான ஜயங்கொண்டசொழநல்லூர் புற்றிடங்-

2 கொண்ட மஹாதெவர்கு இவ்வூர்த் திரையந் தெவர்கண்டன் தாங்குவானான உத்தமசொழ-
வளவதரையன் இதெவர்கு வைத்த ஸந்திகள் இ-

3 க்கொயிலில் ஶிவப்ராஹ்மணந் ஸூரியந் தாங்குவான் புற்றிடங்கொண்ட மஹாதேவனும்
சியாறுதெவபட்டன் மநவாசகங்கடந்தானும் கடம்பந்

4 தாங்குவான்பட்டனும் தழுவக்குழைந்தான் செல்வபட்டனும் இன்நால்வொம் கைக்கொ-
ண்டு [ச]ந்த்ராதித்யவ[ர்] செலுத்தக்கடவொமாக ஸம்மதி-

5 த்துக் கைக்கொண்[டொ]ம் இக்கொயிலில் திருமாளிகைப் பிள்ளையார்கு அமாவாஸி பன்-
னிரண்டும் இடைஉவாப் பன்னிரண்டும் விஷு வயந ஸங்க்ரமம் நாலு[ம்]

6 ம் க்ரஹணமும் இவர்கள் மாதாக்கள் பிறந்த ஐப்பசிப்பூரமும் ஆண்டொரு சதயமும்
ஆண்டு முப்பத்திரண்டு நாள் பிள்ளையாரை அமுதுசெய்விக்கைகு ஸ்ராஹ [சஹ]

7 ஒன்றுகு அரிசி நாநாழி அமுது செய்[வி]த்து இதிலெ நாளுரி அரிசிச்சொற்றால்
அபூர்வி[ர்க]ள் பூசித்தார்கு இடக்கடவொமாக ஸம்மதித்துகைக்கொண்ட காசு இரண்டு
ஆளு-

8 டையார்கு ஸ்நாநஸமிகு ஐஞ்சு திருமஞ்சனக்குடம் நாங்களே கொண்டு திருமஞ்சன
மெடுத்து அபிஷெகம் பண்ண சம்மதித்து கைக்கொண்ட காசு ஒன்றும் உக்ஷிணை-

9 க்ஷேத்ரதெவர்கு சிறுகாலேஸந்தி [ஒ]ரு திருமாலே சார்த்த ஸம்மதித்து கைக்கொண்ட காசு
முக்காலெ ஒரு மாவும் ஆளுடையார்கு ஒரு ஸந்திவிளக்கு எரிக்க-

10 கடவொமாக ஸம்மதித்து கைக்கெண்ட பொன் முக்காலெ மஞ்சாடியும் இரண்டுமாவும்
இஸந்திகள் நாலும் சந்த்ராதித்யவல் செலுத்தகடவொமாகக் கைக்-

11 கொண்டு ஸம்மதித்தொம் . . . . . . பன்மாஹேஸ்வர ரக்ஷை[||*]

---

[1] The inscription is much damaged and incomplete.

No. 28.

(*A.R. No.* 442 *of* 1902).

ON THE SAME WALL.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] குலொத்துங்கசொழ[தெ]வற்கு யாண்டு ௰-வது செய்யூர் புற்றிடங்கொ-
(கொ)ண்டமஹா[தெ]வ[ற்]கு

2 இ[வ்வூ]ர் ஆதிச்சதேவ[ன்] மகன் இ[ல்*]லைநாயகனேனாந் வைத்த சந்தியினக்கு க ஒக்-
றுக்கும் விட்ட பசு ச இப்ப-

3 ச நாளும் இக்கோயிலில் காணிஉடைய சிவப்ராஹ்மணர் . . . . . மட்டும் கெ . .
. . பட்ட-

4 . . இவ்விருவொம் சந்த்ராதித்தவரை செலுத்தக்கடவொம் [||*]

No. 29.

(*A.R. No.* 443 *of* 1902).

On the same wall.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] ராஜ[ர*]திராஜதெவ[ர்*]கு யாண்டு சு-வது செய-ற்ற தெவர்கண்ட-
னாக்குவாதாக உதம-

2 சொழவளவதரைய[ந்] யிக்கொயிலுள்ளெ திருக்கெதாரதெவரை ஸ்ப்ரதிட்டித்து யிதெ-
வ[ர்*]கு யிக்கொ-

3 யில் ஸிவப்ராஹ்மணர் சியாறுதெவ[னு]ம் ஆழ்வாந் முதிமஹாதெவநும் கடம்பக்
[தாங்கு]வாநும்

4 யி[ந்த]தெவரை நிரவதிகளும் பூசித்து அமாவாஸி விஷு-[வயந]ஸம்க்ரமம் ஆட்டு யிசு
நாள் [நித்தம்]

5 நாநாழிநெல் வஐ அரிசி அமுதுசெய்ய பொலிஊட்டாகக் கொண்ட பழங்காசு

6 அரையும் ஸந்திவிளகு ஒ[ந்]றுகு ஆடு ப[ன்*]னிரண்டும் [|*] யிது சந்த்ராதித்தவரை செ-

7 லுத்தகடவொ மிம்முவொம் . . . . . யிடிபாடு மெற்படி ஸிவப்ராஹ்மணரொம் [|*]
திரு-

8 கெ[த]ாரதெவர் விஸ்வேஸ்வரதெவ ரிருவ[ர்*]கும் விஷு-வய[ந]ஸம்க்ரமம் ம[ஹ]ணம்
பூசம் காத்திகை-

9 க திருவாதிரை ஆண்டுவரை எட்டுநா ளாடியருளப் பால[மு]துகுப் பொலியூ[ட்டாகக்]
கை[க்*]கொ-

10 காண்ட புதுக்காசு க கொண்டு சந்த்ராதித்தவரை செலுதக்கடவொ மிம்முவொம் [*|] இது
பக்-

11 [மாஹெஸ்வர ரக்ஷை] [||*]

No. 30.

(*A.R. No.* 444 *of* 1902).

On the same wall.

1 வ பூமன்னு [ப]துமம் பூத்த வெ[வ]ுலகுக் தாமுன் செய் தவத்தாற் பருதிவழித் தொன்றி
நெடுமாலிவ-

2 நெ[க சு]டர்முடி சூடி இருநிலமகளை யுரிமையிற் [பு]ணர்ந்து திருமகள் பணைமுலைச்
செ[ச]ஞ்சாந் தணிந்து

3 பனிவரை மார்வ மணிவரை கிகர்ப்பச் ச[ய]மகள் செந்தனச் சுவட்டாற் புய மிருகயிலைப்
பொ-

4 ருப்[பென்]னத் தொன்ற நாமகள்தானு மெங்கோமகன் செவ்வாய்ப் பவளச் செயொளி
படைத்-

5 தனன்யானெ[ன] [த]வளநன்கிறந் தகித்துடையெனெப் புகழ்மகள் சிந்தை மகிழ் நாளினு மொருகுடை

6 நிலவும் பொருபடைத் திகிரி வெ[யி]லுங் கருங்கலியிருளை த் துரப்ப நிடு பல்லூழி யெழ்கடற் புறத்தி-

7 லுங் கொடாச் செந்த[னி]க்கொ லினிதுலாவ மீனமுஞ் சிலையுஞ் சிதைந்து [வானு]யர்ப் பொன்கெடு மெரு-

8 விற் புலி வீற்றிருப்ப உம்பரியானை யொரெட்டினுக்கு[க்] தம்பமென்னத் தனித்தனி Seyyur. திசைதொறும் வி-

9 ஜையஸ்தம்ப[ம்] நிற்ப பசிப்பகையான(த்)து நிங்கி மன்றுயிர் தழைப்ப மனுவாறு பெருக மாதவர் [1]தவமு ம-

10 ங்கையர் கற்[பு] மாதி[ய]ந்தண ராகுதிப் புகையு மிதெழு கொண்டல் வீசு தண்புனலு மெதினி வளமுஞ் சாதி

11 யொழுக்கமு நிகி யறமும் பிறழாது நிற்பப் பாவும் பழனப்பரப்பும் பணைக்கை மாவு மல்லது வன்றலை படுதல்

12 கனவி[லு]ங் காண்டற் கரிதெதன வருநதிப்புடையினும் பல்வெறு புள்ளினு மல்லது சிறைபடுத லின்றி நிறை பெ-

13 ருஞ் செல்வமொ டவனிவாழ் பல்லவர் தெலுங்கர் மாளவர் கலிங்கர் கொசலர் கன்னடர் கடார[ர்*] தென்னர் செ[ர*]லர் சிங்களர் கொ-

14 ங்கணர் தி[ரி*]கர்த்த ரங்க ரவந்தியர் கைகயர் ஜிகக ரறைகழல் வெந்தரு மல்லா வரைசரு முறைமையில் வரிந்த திறைகுணந் திறைஞ்-

15 சவும் அம்பொன்மடக்கொடி செம்பியன்கிழானடி அருள்முகந் தினிதுடனிருப்ப அருள்புரி செம்பொற்கொட் டிமை[ய]ப்பாவையுஞ்

16 சிவனும் பொலச் செம்பொன்வீரஸிம்ஹாஸநத்துப் புவனமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கொவிராஜகெஸரிபன்மரா-

17 ன திரிபுவனசக்ரவர்த்திகள் ஸ்ரீகுலொத்துங்கசொழதெவற்கு யாண்டு நாலாவது ஜ[யங்]-ங்கொண்டசொழமண்டலத்துச் செம்-

18 பூர்க்கொட்டத்துப் பொறையூர்நாட்டுச் செய்யூரான ஜயங்கொண்டசொழநல்லூர்ப் புறமிடங்கொ[ண்ட]ருளிந மஹாதெவர் திருப்ப-

19 ள்ளியறை[நா]ச்சியாற்கு இவ்வூர் ஊரொம் ஸ்ரீயநமாகக் குடுத்த நிலமாவது [*] இவ்வூர் எரிஎதிர்வாய்[க்கு*] மெற்கு மதுராந்தகத்-

20 தெல்லைக்குக் குழிக்குத் தெற்குச் செய்யூரான விராராஜெந்த்ரநல்லூர்க்கு வடவெல்லைக்கு[2] வடக்கு மதுராந்தகத்தெல்லைக்குத் தெற்கு இரண்-

21 டாம் [த*]ரத்து நில முட்பட நிர்நிலமும் புன்செய்யுந் தாங்கலும் உட்பட்ட நிலம் பத்து வெலிபுவு[3] இப்பள்ளியறைநாச்சியாற்கு-

22 ச் சந்திராதித்தவரை செல்லக்கடவதாகவும் [*] இந்நிலத்தால் வந்த இறையும் ஆணும் அமஞ்சியும் எப்பெர்பட்ட சில்வரியும்

23 ஊரிலெ எற்றி நாங்களெ இறுத்துக் குடுக்கக்கடவொமாகவும் [*] இப்படி ஸம்மதித்து இறை இழித்தி இந்நிலத்தா[லு]ள்ளது

24 இங்நாச்சியாற்கு அமுதுபடி செல்லக்கடவதாக இப்படி ரக்ஷணம் பண்ணிக்குடுத்து ரக்ஷ-
ணப்படி கல்வெட்டுவித்தோம் செய்யூரான ஜயங்-

25 கொண்டசோழநல்லூர் ஊரோம் [|*] இவர்கள் வெண்ட எழுதினென் ஸ்ரீமதுராந்தகச்-
சதுர்வேதிமங்கலத்து வ்ராஹ்மணன் பாம்புதிண்டி ய-

26 [ஜ்ஞ]³-த்திவிட்டனென் [|*] இப்படிக்கு இவை செம்பியன் வளவதரைய னெழுத்து [¹]
இப்படிக்கு இவை ராஜநாராயணவளவதரைய னெ-

27 ழுத்து [|*] [இ]ப்படிக்கு இவை ராஜாதிராஜ வளவதரைய னெழுத்து [|*] இப்படிக்கு
இவை விக்கிரமசொழ வளவதரைய னெழுத்து [|*] இது பந்மாஹேஸ்வர ரக்ஷை [||*]

No. 31.

(*A.R. No.* 445 *of* 1902).

ON THE SAME WALL.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] குலொத்துங்கசொழதெவற்கு யாண்டு நாலாவது செய்யூரான ஜயங்கொ-
ண்டசொழநல்லூர் ஊரோம் இ[வ்]வூர் தெவ-

2 ர்களுக்குத் திருப்படிமாற்றுக்கு உடலாக இவ்வூர் உப்புப்படுக்கும் அளம் தொண்ணூற்-
றிலும் உப்புபடுத்[த] அளங்களில்(ப்) பரதெஸிகளுக்கு[ம்*] மற்-

¹ The letters ஜவ are engraved below the line a little to the right of ழ.

² The word வெவ்லை is written below the line.

³ Read வெலியும்.

3 றும் காசுக்குக் கொண்டார்க்கும் அளந்து முற்ப்பட்ட உப்பில் உப்புப்பிடி வைத்தபரிசா-
வது வெணூரளத்தில் உப்புப்பிடியா லுள்ளது குருகீஸ்வ-

4 ரமுடையமஹாதெவற்கும் வடமுட்டைகாலளம் வெணூரளத்துக்குத் தெற்கு முட்டை-
காலுக்கு வடக்கு நடுவுள்ள அளங்களி லுப்புப்பிடி-

5 யா லுள்ளது புற்றிடங்கொண்டருளின மஹாதெவற்கு இருகூறும் இதெவர் பள்ளி-
யறைநாச்சியாற்கு ஒரு கூறும் கொள்வதாகவும் தென்முட்டை

6 காலளத்தில் வடக்கடைய பத்தி லுப்புப்பிடியா லுள்ளது அருமொழீஸ்வரமுடைய மஹா-
தெவற்கும் இடபாடியிறை ஓடையச்சிறு-

7 வதிக்கு வடக்கி லளமுட்படத் தெற்குத் தாங்குவானள முட்பட்ட பத்தளத்தில் உப்புப்
பிடியால் உள்ளது குலொத்துங்கசொளீஸ்வ-

8 ரமுடையாற்கும் இப்பிடியாற் தெற்கிற் கங்கைகொண்டான்காலி லள மூன்றும் தெற்கிற்
பெரியஅளம் ஒன்றுமாக நாலளத்திற் பிடியா லுள்-

9 ளதுக்கு . . . .

10 . . . . பண்டாரத்தில் . . . . [ம]து-
ராந்தகவிண்ணகராழ்வ[ார்]க்கும் இப்படியி விதன்

11 . . . . கொண் டளத்தாலுள்ள உப்பு . . . . சொளீஸ்வர
முடைய மஹாதெவர்க்கும் கங்கைகொண்ட சொழப்-

12 பெரளத்திலும்] விட்ட பிடியா லுளது ஸ்வயம்புதெவர்க்கும் உடை[ட]யாற்கும் அரு-
கதெவற்கும் ஒக்கக் கொள்ளக்கடவதாகவும் [|*] இவ்வளங்களிற் பரதெஸிகளுக்கும்

13 . . . . காதிட்டாற்கும் அளந்து . . . . காங்களெ[உப்ப]ளப்-
பித்துக்கொண்டு அளத்தா லொருகாசு . . . . க்கடவொமாகவும் எங்களால்

[மூக்]றத்தொன்று நாங்கள்
14 விட்டொமாகில் ஸ்ரீகோஹெஸ்வாஞ்செய்விக்ககடவ தெவகன்மிகளும் தாங்க[ளெ] உப்புப் பிடித்து இ . . . . இக்காசு செலுத்தக்கடவார்களாகவும் ஸம் மதி[1]

No. 32.

(*A.R. No.* 446 *of* 1902).

ON THE SOUTH WALL OF THE MANDAPA IN FRONT OF THE KAILASANATHA TEMPLE IN THE SAME VILLAGE.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] விக்கிரமசொழதெவற்கு யாண்டு எட்டாவது
2 சொழ[ம]ண்டலத்துப் பாண்டியகுலாசனிவளநாட்டு ஆற்காட்டு-
3 க்கூற்றத்து நெய்தல்வாயிலி[ல்*] நெய்தல்வாயிலுடையானு-
4 க்குப் புக்க வயிரியெங் செய்யூரான ஜயங்கொண்டசொழ-
5 நல்லூர் ஸ்ரீகயிலாஸமுடைய ராஜெந்த்ரசொழீஸ்வரமுடையார்க்கு
6 இக்கொயில் ஶிவப்ராஹ்மணர்வசம் ஸந்திவிளக்குக்கு விட்ட ஆடு பன்னிரண்-
7 டு [।*] இது [ஶ]ந்த்ராதித்தவரை செலுத்த [||*]

No. 33.

(*A.R. No.* 447 *of* 1902).

ON THE SAME WALL.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] குலொத்துங்கசொழதெவற்கு யாண்டு நால்பத்துநாலாவது செம்புர்கொட்டத்துப் புறையூர் நாட்டு செய்யூரான ஜயங்கொண்-
2 டசொழநல்லூர் செய்யூருடையான் தாங்கி மாந்துறைநம்பியென் இவ்வூ[ர்] ராஜெந்த்ரசொழீஸ்வர(ம்)முடைய மஹாதெவற்க்கு சூரியன் கம்பன்வசமும் மா-
3 தவன் கம்பன்வசமும் சந்திவிளக்குக்கு விட்ட ஆடு பன்னிரண்டுங் கொண்டு(க்) கொயிலி லுள்ளதனையும் சந்திராதித்தவரை இவ்விளக்கு செலுத்தக்கட-
4 வொ(ம்)மா(ன்)னோம் இவ்விருவொம் [।*] இதெப் பன்மாஹெஸ்வர ரக்ஷை [||*]

[1] The inscription is incomplete.

No. 34.

(*A.R. No.* 448 *of* 1902).

ON THE SAME WALL.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] குலொ[த்]துங்கசொழதெவற்கு[2] யாண்டு நா[ற்*]பத்துஅஞ்சாவது செம்- ஜெயங்
பூர்க்கொட்டத்துப் புறையூர்நாட்டு
2 செ[ய்*]யூரான ஜயங்கொண்டசொழநல்லூர் வெள்ளாளன் அரிந்தமன் திருமிலகண்டன்
இவ்வூர் ராஜெந்த்ரசொ-
3 [ளீ]ஸ்வரமுடைய மஹாதெவற்க்கு சடையன் சிவகதிவசமும் மாதவன் கம்பந்வசமும் சந்தி-
விளக்குக்கு விட்ட ஆடு பன்னிரண்டுங்
4 கொண்டு சன்திராதித்தவரையும் செலுத்தக்கடவொ(ம்)மானொ[ம்*] இவிருவொம்
[|*] இவை பந்மாயெசுவர ரக்ஷை [||*]

No. 35.

(*A.R. No.* 449 *of* 1902).

ON THE NORTH WALL OF THE SAME MANDAPA.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] திரிபுவனச்சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையு[ம்*]
ஈழமு[ம்] கரு-
2 வூர்[1] கொண்டருளிய குலொத்துங்கசொழதெவற்க்கு யாண்டு உ௰கூ-வது செய்யூரானஜய-
3 ங்கொடண்சொழநல்லூர்[2] ஸ்ரீகயிலாயம் இராஜெந்திரசொளி[ஸ்]ரமுடையார் கொயில்

4 காணியாளன் உய்யவந்தான் தாங்குவான்பட்டன் உள்[ளி]ட்ட மூவொமு[ம்*] தாங்கு-
வான் மா-
5 தெவபட்டன் உள்ளிட்ட மூவொமும் வண்ணக்கு கங்கைகொண்டான் சந்தியாண்டான்
6 சந்திவி[ள*]க்கு க [|*] ஒன்றுக்கு கொண்ட பழங்காசு உஇ [|*] இக்காசு இரண்டரையுங்
கொண்டு ச-
7 ந்திவிளக்கு சந்திரஆதித்தவரை செலுத்தக்கடவொம்
8 இன்னாயநாற்க்கு உ௰கூ-வது இக்கொயில் காணிஉடைய சிவப்[பி]ராம[ண*]ரொ[ம்*]
[|*] தாங்குவ[ர*]ன் மா-
9 தெவனும் உய்யவந்தான் தாங்குவான் உள்ளிட்டொம் பெருந்துறைப்பாக்கிழான் நக்-
10 கன் வைத்த சந்திவிளக்கு க ஒன்றுக்கு கொண்ட புதுக்காசு உா [|*] இக்காசு இருநூறுங்
கொண்டு
11 [சந்*]திராஆதி[த்*]தவரை செலுத்தக்கடவொம் [|*] இது பந்மாஹெஸ்வர ர[க்ஷை*]-
க்ஷை ||—

No. 36.

(*A.R. No.* 450 *of* 1902).

ON THE EAST WALL OF THE SAME MANDAPA.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] ராஜாதிராஜதெவ[ர்*]கு யாண்டு ௰-வது செய்யூர் தெவர்கண்டந் தாங்கு-
வானாந தாங்குவானாந உத்தமசொழவளவதரைய[ந்]பகுவ் யிக்-
2 கொயில் ஸிவப்ராஹ்மணர் கடம்பந் தாங்குவானும் கம்பன் தெவநு[ம்*] கம்பந் உய்யவந்-

3 திருவாதிரை நாயகரை ஶ்ரீமஹாரக்ஷணை யெழுந்தருளப் பொலியூட்டாகக் கொண்ட பழங்காசு முக்காலே மாகாணியாற் பொ-
4 லியுந் திரமம் ஒன்றெ காலு மிதற்கும் சந்த்ராதித்தவரை செலுத்தக்கடவோம் மார்கழித்திரு-
5 வாதிரை நெய்யாடி அமுது-
5 செய்யப் பொலியூட்டாற் கொண்ட பழங்காசு அரையெ அரைகாலுக்கு ஆட்டுப் பொலியுந் திரமம் முகா-
6 லெ முந்றுமா மிதற்கும் சந்த்ராதித்தவரை செலுத்தகடவோ மிம்மூவோம் [|*] [பன்]-மாஹேஶ்வ[ர*] ரக்ஷை[||*] மெற்படியா-
7 க மெற்ப[டி]யோம் பிரட்டாதி[உவா] முதல மார்கழிஉவா வரை நாலிடை [உவா] காய்க-ரை ஶ்ரீமஹாரக்ஷணம் எழுதருளப் பொலிஊட்டா-
8 க கொண்ட பழங்காசு முன்றெ எட்டுமா நவஙு கொண்டு சந்த்ராதித்தவரை செலு[த்]தக்கடவோம் [ஶ்ரி]வைஷ்ணவர் மிம்மூவோம் [|*] பல்மாஹேஶ்வ-
9 ர [ர]க்ஷை[||*]

---

[1] Read கருவூரும்.

[2] Read ஜயங்கொண்ட.

No. 37.

(*A.R. No.* 451 *of* 1902).

On the same wall.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] குலொத்துங்கசொழதெவற்கு யாண்[டு] நாற்-
2 பத்தெட்டாவது செய்யூராந ஜயங்கொண்டசொழநல்-
3 லூர் ஸ்ரீகயிலாயமுடைய உறாதெவர் ராஜெஜந்த்ர-
4 சொளீசுவரமுடையாற்கு இறையந் தெவர்கண்டந் ஒற்றி-
5 கொண்டாநாந செம்பியந் வளவதரையநெந் உள்ளுரி-
6 ல் எந் காணியாந கிர்மிலத்தில் இத்தெவற்கு திருந . . .[1]

No. 38.

(*A.R. No.* 452 *of* 1902).

On the same wall.

1 ஸ்ரீராஜாதிராஜதெவற்கு யாண்டு ரு-வது செய்யூர்த் தெவர்கண்டந் தாங்குவாநாந உத்-தமசொழ வளவதரையநெந் இத்தெவற்கு இக்கொயிலில் ஶிவப்ராஹ்[ம*]ணர் சியாறு-தெவ நம்மையாழ்வாநும் கடம்பந் தாங்குவாநும் கம்பந் தெவநும் நித்த திருமஞ்சண-ஞுட[ம்*] உ அபிஷெக[ம்*] ப[ண்ணி]த் திருப்ப-
2 ள்ளித்தாமஞ் சார்த்தவும் பொலியூட்டாகக் கொண்ட பழங்கா சரை தைப்பூச[ம்] சித்தி-ரைச் சதையம் வைகாசி மூலமும் ஆட்டு முந்று நாள் ஶ்ரீமஹாரக்ஷணை யெழுநருளக் காசொந்றுந் திங்க ளரைக்காற் திரமம் பொலிசையாகக் கொண்ட பழங்கா சிரண்ட-ரை இரும்புபொசி தூபமணியத்
3 தாப்திபபாத்ர காற்பலம் [|*] ஈஃ88[–ம்*]ஙகள் சந்த்ராதித்தவரை செலுத்தகடவொமாகொ மிம்மூவோம் உ மெற்படியெந் மதுராந்தக விண்ணகராழ்வார்க்கு அக்கொயிலிற் காணி-உடைய வைகாநஸனந் ஆளி ஆரா அமுது ஆளிதாமொதரநான வெங்கட-
4 வநும் நித்த மிரண்டு திருமஞ்சணஞுட மபிஷெகம் பண்ணித் திருமாலை சாத்தப் பழங்காசு காலெ அரைக்கால் விஷுவயநஸம்க்ராந்தி ஶ்ரவணம் [ஆ]ட்டாறுநாள் பஞ்[ச](கெ)வ்யமாடி அமுது செய்யப் பழங்கா சரை வழிவிளக் கொன்றுக் காடு பங்கிரண்டு ஆதிச சதைய-

5 மெழுகருள ஆ(ட்)டிச் சதையம் தவிந்து ஊரவர் சொற்படி ஊற்கு பொருந்தும் ஆ(ட்)-
டி அமிழ மெழுந்தருளப் பழங்கா சொந்றைறயெ யரைக்கால் காசொன்றுக்குத் திங்க
ளரைக்காற் திரமம் பொலிசைக்கு நாங்கள் கொண்ட பழங்கா சிரண்டரை [|*] ஷி-
6 ஷ்டி[-ர்*]கள் சந்ராதித்தவரை செலுதக் கடவொமாக யெங் காணியாக விஷ்ணுஸ்தானத்திலுங்
கல்வெட்டுவிச்சொ மிம்மூவொம் [|*] [தூப்பணி] பல்மாஹெமஸ்வராரும் ஊரவரும்
ரக்ஷை உ மெற்படி கொயில்களிற் செய்த யஷ்டி[-ர்*]ம் ஸிவப்ராஹ்மண[ர்] ரக்ஷை உ

Below the inscription are engraved the following eight lines :—

1 வளவதரையங் மல்லிகார்ச்சுநதெவரை யெழு[ந்தருளிவிச்ச] பித்தெவற்கு யிக்கொயிலில் ஸிவப்ராஹ்மணர் . . . . .

2 மல்லிகார்ச்சுநதெவரை திருவஸ்தி பூஜித்து அமாவாஸி விஷுவயநஸங்க்ரமம் ஆட்டு வெஷ- நாள் நித்த அமுது . . . . .

3 னாகு க-கு விட்ட ஆடு பதிரண்டுங் கொண்டு சந்ராதித்தவரை செலுதகடவொ மிநால்-வொம் யிதற்கு-ம் . . . . .

4 ட்பட சிறுதிவிளகு முட்டகலும் பொகு கிகி ய-வம் |— ஊரவ ரக்ஷை மெற்பிடிபாடு . . . . . :

5 மெற்பிடிபாடு மெற்படி ஸிவப்ராஹ்மணரொம் [ம*]ல்லிகார்ச்சுநதெவ[ர*]ரும் ராஜெந்த்ர-[சொழீ*]ஸ்வரமுடைய[ர*]ர்கும் விஷுவயந . . . . .

6 வித(கு)குப் பொலியூட்டாகக் கொண்ட புதுக்காசு க கொண்டு சந்ராதித்தவரை செலுத- கடவொ மிந்நால் . . . . .

7 ம் பிள்ளையா[ர்*]ரும் மல்லிகார்ச்சுநதெவ[ர்*]ரும் ஸந்திவிளகு காலு காலும் பொலி-யூட்டாகக் கொண்ட புதுகாசு நமெ முப்பத்திரண்டு கொண்டு சந்ராதித்தவரை செலுதகடவொ மிபிருவொம் பந்மாஹெஸ்வர ரக்ஷை— மெற்பிடிபாடு கம்பக் உய்ய-வந்தாந் பட்டநெ் பெரியதிருவாசலும் தெற்கில் சூரியதெவ[ர்*]ரும் சந்திவிளகு இரண்டுகு ஆடு . . . . .

8 ரஹெஸ்வ[ர*] ரக்ஷை ||—

No. 39.

(*A.R. No.* 453 *of* 1902).

ON THE SAME WALL.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] ராஜராஜதெவர்கு யாண்டு ரு-வது ஜயங்கொண்டசொழமண்டலத்து Seyyur. செய்யூராந ஜயங்கொண்டசொழநல்லூர்த் திரையந் தெவர்கண்டந் [தாங்]-

2 குவாகாக உத்தமசொழவளவதரையந் இவ்வூர் ஸ்ரீகயிலாஸமுடைய ராஜெந்த்ரசொழீ-ஸ்வரமுடையார்கு இக்கொயிலில் ஸிவப்ராஹ்மணரொம் இவர்வசம் பெ-

3 ற்க் கொண்டு சந்ராதித்தவரை செலுத்தகடவொமாக ஸம்மதித்த யஷ்டி-ர்கள் [|*] இத்தெவர்கு ஸந்திவிள கொந்றுகு ஸம்மதித்து வெகொண்ட ஆடு பதிரண்டும் இக்-கெ[ா]-

4 யில் நாயகரை மாசிமகமும் பங்குநியுத்திரமும் ஸாஸ்த்ராதிகமா[க]படி ம்ராநேப்ரக்ஷ-ணமாக எழுந்தருளி திருமஞ்சநம் பண்ணி அமுதுசெய்தருள ஸம்மதித்து வெ-கொண-

5 [ட] காசு ஒற்றையெ[1] முந்றுமா முக்காணியும் [|*] இஷ்டி-ர்த சந்ராதித்தவரை செலு-த்தக்கடவொமாக ஸம்மதித்தொம் சியாறு தெவபட்டந் மநவாசகங்கடந்தாநும் கடம்பந் தாங்குவ[ா]-

6 [தும்] கம்பந் தெவநும் தழுவகுழைந்தாந் குளிகும்பிராநும் இப்படி ஸம்மதித்தொம் [|*]
இது-ஃ பல்மாஹெஸ்வர ரக்ஷை||— ஹர[ஃ] [||*]

No. 40.

(*A.R. No.* 454 *of* 1902).

ON THE WEST WALL OF THE CENTRAL SHRINE IN THE SAME TEMPLE.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] ராஜாதிராஜதெவர்[ர்*]கு யாண்டு [மஉ]-வது செய்யூ[ர்] திரை-
2 ய[ந்] தெவர்கண்டந் தாங்குவாநாந உத்தமசொழ [வ]ளவதரைய[ந்]பக்-
3 [க]ல் யிக்கொயிலில் காணிஉடைய ஶிவப்ராஹ்மணர் கடம்ப[ந்]
4 தாங்குவாநும் கம்ப[ந்] தெவநும் க(ட)ம்ப[ந்] உய்யவந்தாநும் யிம் முடெ-
5 வாம் நாயகரை ஆடி ஆவணியில் யிரண் டிடைஉவா ந-
6 [ம்] ஸ்ரா[ஃ]வப்ரதக்ஷிணம் சந்த்ராதித்தவரை எழுநருளப் பொலிஊட்டாக கொ-
7 [ர]ண்ட ப[ழங்]காசு ஒக்றரையெ[1] யிரண்மொவும் மெற்படியார்பக்கல்
8 பலரும் பல்விசையாலு முந்பு கல் வெட்டுவிச்சு எழுநருளுவிச்சார்
9 பலரும் கிழக்கெ யிஷபதெவர் முந்(பு ந்)பெ நாள் பத்து [இர][ண்*]-
10 டு ஆக நாள் பந்நிரண்டும் எழுந்தருளப் பொலிஊட்-
11 டாகக் கொண்ட பழங்காசு பத்து [|*] பத்துங்-
12 கொண்டு சந்த்ராதித்தவரை செலுத்தக்கடவொம் [|*] மா-
13 ஸந்தொறும் நமர வ்ரதக்ஷணமாக யிந்நாள் பந்நிரண்டும் எ-
14 ழுந்தருளுவிக்கக் கடவொம் [|*] கடம்ப[ந்] தாங்குவாந் எழுத்து [|*] க-

15 ம்ப[ந்] உய்யவ[ந்] தாந் எழுத்து [|*] கம்ப[ந்] தெவ[ந்] எழுது [|*] பல்மஹெ-
16 ஸ்வர ரக்ஷை[||*] மெற்படி பக்கல் (யிக்கொயி)யிக்கெ[க]ாயிலில் கா-
17 ணி உடைய ஶிவப்ராஹ்மணந் கம்பந் உய்யவந்தாநெந்
18 மெற்படி நாள் பந்நிரண்டில் ஐப்பசிப் பரணி யெழுந்தருளு மந்று தெவரடியாரையும்
தபஸ்யரையு மய்ராக ஸ்ரீ
19 அமுதுசெய்விகூப் பொலியூட்டாகக் கொண்ட பழங்காசு க ஒந்றிகால் பொலியுந் திரமம்
கஇ ஒன்றரையுங் கொ-
20 ண்டு சந்த்ராதித்தவரை செலுத்தகூடவெந் கம்பந் உய்யவந்தாநெந் [|*] இவை யெந் நெழு-
த்து [|*]
21 மெற்படி கல்வெட்டு மெற்படி ஶிவ்ப்ராஹ்மணர் காணிமெலெ [|*]
22 பந்மாஹெ-
23 ஸ்வர [ர*]க்ஷை உ

[1] Read ஒன்றரையெ.

No. 41.

(*A.R. No.* 454-*A of* 1902).

ON THE SAME WALL.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] ராஜாதிராஜதெவ[ர்*]க்கு யாண்டு மக
2 வது செய்யூர் தெவர்கண்டந்
3 தாங்குவாநாந உத்தமசொழவளவ-

4 தரையக்பக்கல் மிக்கொயிலில் மிவவ்ராஹ-
5 ஷணர் கடம்ப[ங்] தாங்குவாநும் கம்-
6 பங் உய்யவந்தாநும் மிப்பெரியதிரு-
7 வாசல் சுவரும் திண்ணையும் யிட்டுக்கு-
8 ட்டி மெய்ப்பொலியூட்டா[க]க் கொண்ட
9 பழங்காசு ஒக்றெ காலெ முந்நுமா மு-
10 க்காணியும் கவர்நூயும் கொண்-
11 டு சந்த்ராதித்தவரை செலுதக்க[ட]-
12 வொம் மிவ்விருவொம் [|*] பன்மா-
13 ஹெஸ்வர ரக்ஷை [||*] மெற்படிபாடு மெற்படி மிவவ்ரா-
14 ஷணன்(ப்) புற்றிடங்கொண்டார் கொயிலில் விஷ்ணுவரதெவர்[ர்*]க்கு[ம்*] ம[ஹி]-
க்[ர]-
15 சனதெ[வ*]ர்க்கும் காத்திகை விளக்குக்கும் பொலியூட்டாக ஙாங்க[ள்] கொண்ட
16 பழங்க[ா]சு இ அரைக்கு [ஆட்]டெப் பொலியுங் கிரம முக்காலும் கொ-
17 ண்டு சந்த்ராதித்தவரை செலுத்தக்கடவொம் [|*] ப[ந்]மாஹெஸ்வ-
18 ர ரக்ஷை ||[1]

No. 42.

(*A.R. No.* 454-*B of* 1902).

On the same wall.

1 [ஸ்வ]ஸ்தி ஸ்ரீ[||*] ராஜாதிராஜதெவ[ர்*]க்கு யாண்டு மக-
2 [வ]து செய்யூர் தெவர்கண்டங் தாங்கு-
3 வாகாக உத்தமசொழ வளவதரையர்-
4 பக்கல் மிக்கொயிலில் மிவவ்ராஹணர்
5 கடம்பங் தாங்குவாநும் கம்பங் உய்ய-
6 வந்தாநும் மிவ்விருவொம் மிப்பி-
7 ள்ளையார்கொயில் சுவ ரிட்டுக்கட்டி
8 மெய்ப்பொலியூட்டாக கொண்ட

[1] Below this inscription are engraved the following lines :—
1 மெற்படியார்பக்கல் மிக்கொயிலிற் காணிஉடைய மிவவ்ராஹணர் தாங்குவ[ாங்] மஹா-
தெவநெநும் கம்பங் உய்யவந்தாநும்
2 மிதிதெவ[ர்*]க்கு ஸஂஹ்ர[மம்] நெய்யாடி அமுதுசெய்யப் பொலியூட்டாக கொண்ட அங்-
றூடு கற்புதுக்காசு காலு காலுக்கு ஆட்டுப் பொலியும் [சி]தும் ஆறு ஆறு கொண்டு
சந்த்ராதித்தவ-
3 ரை செலு[த்தக்கடவொ]ம் பந்ம[ாஹெஸ்]ர ரக்ஷை [||*]
1 மெற்படியால் செய்யூரும் மிவ்வூர் கொயில்களிலும் காணிஉடைய பாரசிவங் ஐயா[ற]ங்
உகதெநுங் ஐப்பசிப் பரணியும் மெற்படி நாள் மெடல் திருகூரதி . . . . . . நாள்
இரண்டுக்கு நாயகர் நமரவர்த்தீணம் எழுநருளப் பொலியூட்டாகக் கொண்டு கொடி-
யூர் புது-
2 காசு , . ஆறு கொண்டு சந்த்ராதித்தவரை உகந[ம்*] உதகாயநும் செலுதக்கடவொம்
பாரசிவங் ஒற்றி . . . . மிக்கொயிலில் மிவவ்ராஹணரொம்

பாரசிவநுகு மெற்படியார்பகல் கொண்ட நாள் இரண்டிநால் வந்த காசாகித் திருவிருனு காசிரண்டிநு க்ஷதரபாலதெவரை பூ
3 மெற்படியாக்பகல் கம்பக உய்யவந்தாகெக் ஒரு பசுவுஞ் சித்தம் ஒரு . . . . வட
4 கிர்வார்கூப் பொலியூடாகக் கொண்ட காசிரண்டுங் கொண்டு சந்ராதித்தவரை செலுத-கடவொம்

9 புதுக்காசு காலு ச-ம் கொண்டு சந்ரா-
10 தி[த்]தவரை செலுத்தக்கடவொ-
11 ம் [|*] [பந்]மாஹெஸ்வர ரக்ஷை ||—

No. 43.

(*A.R. No.* 455 *of* 1902).

ON THE WEST WALL OF THE SECOND PRAKARA OF THE NATARAJA TEMPLE AT CHIDAMBARAM, CHIDAMBARAM TALUK, SOUTH ARCOT DISTRICT.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ ௵ சகலபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ கொப்[பெ*]பருஞ்சிங்கதெவர்க்கு யாண்டு முப்பத்தாறுவது ஸிம்ஹநாயற்றுத் தியதி ஒன்பதினால் தனியூர் பெரும்பற்றப்புலியூர் மூலப்பருஷையார் எழுத்து [|*] நம்மூர் நிலக்கணக்கு தன்மப்பிரியனும் தில்லைமூவாயிரவெளானும் கண்டு நம்மூர மெல்பிடாகை [க*]ங்கைகொண்டசொழப் பெரிளமைநாட்டு அச்செரிச் சாத்தங்குடியான மயி(ல்)பாலகுலகாலநல்லூர்ப்பால் ஸ்ரீ சுந்தரசொழவ[தி]க்கு மெற்கு சொழகுலசுந்தரவாய்க்காலுக்கு தெற்கு

2 கூ-கூ[1] ௩-சதிரத்து எதிரிலிசொழன் திருநந்தவனத்து எல்லைக்கு மெற்குப்பட்ட நிலத்து குலொத்துங்கசொழன் திருத்தொப்புக்கு மண்கொண்ட கு[ழி]யாய் தரமிலியாய் மாராயர் கூத்தப்பிரானர் உள்ளுட்டார் பெரில் மா[ப்]றெ[ப]று பெற்ற நிலமாய் இவர்கள்பக்கல் முன்னாளில் முதலியார் திருமஞ்சணமழகியார் விலை கொண்டு தாமரைஒடையாய் இவர் புன்பயிர்ச் செய்து அனுபவித்துவருகிற குளம் துகுத்து முதலியார் திருவையாறுடையார் தில்லைநாயகச்சரு-

3 ப்பெதிமங்கலம் என்னும் திருநாமத்தால் வைய்த்த அகரத்து ப்ராஹ்மணர் நாயகர் திருத்தெர் எழுந்தருளும்பொது திருப்புறக்குடையிலெ ஸ்வஸ்த்யயனம் பண்ணி ஸெவித்தும் திருநாள்களிலும் திரு(வ்)வஸந்தன் திருநாளிலும் குலொத்துங்கசொழன் திருத்தொப்பி(லி)[ல்*] எழுந்தருளினால் ஸ்வஸ்தி சொல்லி ஸெவித்தும் திருமஞ்சனகாலத்து ஸ்வஸ்த்யயனம் பண்ணி ஸெவித்தும் எதிரிலிசொழன் திருநந்தவனத்து பிள்ளையார் சிவபாதசெகரன் சித்தத்துணைப்பெருமாள் உற்ஸவ-

4 ங்களுக்கு திருப்பாலிவலத் திருநாள்க்களுக்கு எழுந்தருளினால் [ஸ்ரீ][ஜ*]ப்ராஹணம் பண்ணிஅருளும்பொது ஸ்வஸ்தி சொல்லியும் செவித்துப்பொதுகிற அகரத்து ப்ராஹ்மணர் பலகட்டளைகளிலும் பலர்பக்கல் ஊனமாகவும் விலையாகவும் கொண்டு அனுபவிக்கிற நீ கூஇ [|*] இன்நிலம் ஒன்பதரையும் அம்பலநாயகப்பெருந்தெருவில் திருநாவுக்கரசுதெவன் திருமடத்து நாயனர் அழகியதிருவையாறுடையார் கிழைத்திருவாசல் முககட்டணத்து எழுந்தருளிஇருந்து பூஜைகொண்டருளுகிற குலொத்துங்கசொழவிநாய-

5 கப்பிள்ளையாரை [ரா]ஜாக்கள்தம்பிரான் திருவீதிநாயக[ர்*] திருப்பவனி எழுந்தரு[ளு*]ம்பொது திருக்கண் சாத்தியருளும் நாள்க்களுக்கு திருமுன்பு செவிக்கும் திருக்கா-

ட்ச்சிகளுக்கும் திருப்பண்ணியாரத்துககும விட்ட ஙூ இ இனங்லம அரையும ஆக ஙூ ம-லி [|*] இன்நிலம் பதிற்று வெலியும் இன்நாள்முதல் முன்பு உடையார் அழகிய-திருவையாறுடையார் திருநாமத்துக்காணிக்கு நாங்கள் முன்பு எழுதிக்குடுத்த விவஸ்தைப்படியெ உடையார் திருச்சிற்ற[ம்*]பலமுடையார்க்கு திரு[த்]தெர் ம[ட]க்கு விழுக்காட்டிலெ திருத்தெர் எழுந்தருளிவிக்கவும் கொயிற்கு (கு)டிமை உள்-ளிட்ட ஸஹாவிநியொகமும் மற்றும் சென்னிர் அமைஞ்சி உள்ளிட்ட தெவைகளும்

6 வெள்ளான் வெட்டியும் உட்பட எப்பெர்பட்டனவும் தவிர்ந்து ஊர்க்கிழ் இறையிலியாக உதகம் பண்ணிக்குடுக்கையில் இன்நிலத்துக்கு வந்தன ஊரிலெ எற்றி இறுக்கவும் இன்-நிலங்கள் ஒழுகும் மடக்கும் பிற[க்]கும் இடத்து தில்லைநாயகசசருப்பெதிமங்கலத்து ஸபையன பட்டர்கள்பெரி[ல்*] தில்லைமூவாயிரவிளாகம் என்னும் பொாலெ எழுதக்-கடவர்களாகவும் [|*] இப்படிக்கு திருமாளிகையிலெ கல் வெட்டிக்கொள்ளக்கடவர்க-ளாகவும் கடவதாகவும் சொன்னெம் [|*] இப்படி செய்யப்பண்ணுக [|*] இவை அரு-ளால் ஊர்க்கணக்கு எடுத்தபொற்பாதப்பிரியன் எழுத்து [|*] இப்படிக்கு மூலபருஷை-யார் எழுத்திட்ட நியொகம் திருக்கைகொட்டியில் ஓடுக்கி கல் வெட்டியது உ

[1] This symbol stands for the word கண்ணுற்று.



கருப்பு சிவப்பு பானை ஓடுகள்



சிவப்பு பானை ஓடுகள்



வன்மீகிநாதர் கோயில் வரைபடம்



கைலாசநாதர் கோயில் வரைபடம்

நிழற்படங்கள்

பெருங்கற்கால ஈமச்சின்னங்கள்

விநாயகர்

தட்சிணாமூர்த்தி

மண்டபத்தூண்

லிங்கோத்பவர்

துவராபாலகர்கள்



கைலாசநாதர் கோயில்

வள்ளி முருகன் தெய்வயானை

கன்னியம்மன் கோயில்

கரியமாணிக்கப்பெருமாள் கோயில்

அம்மன் சன்னதி விமானம்